இது
# நம்தேசம்

'Registered in the department of posts of Srilanka under No.QD/173/News/2014'

வாரமலர்

பார்வை-02 யூன். 17.2015 - 24.06.205 வியூகம்-18 பக்கங்கள்-16 விலை-ரூ.25.00

Web - www.ithunamthesam.com

Email - ithunamthesam@gmail.com



# தமிழ் முற்போக்கு கூட்டணி என்ன செய்யப் போகின்றது...?



ரகர் வீரரின் கொலையாளி யார்? 06



தமிழருக்கு ஒரு ஜனநாயகம் சிங்கள மக்களுக்கு இன்னொர் ஜனநாயகமும் பின்பற்றப்படுகிறது! 08-09

தேசத்தின் உண்மைக் குரல்

# காணிகள் கிடைக்காவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதம்



கொக்கிளாய் கொக்கு தொடுவாய் கருநாட்டுகேணி ஆகிய இடங்களிலுள்ள 600 ஏக்கர் வயல்நிலங்கள் தமக்கு கிடைக்காவிடில் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தில் குதிக்கப்போவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில்முல்லைத்தீவுமாவட்டத்தில் உள்ள துணுக்காய் மாந்தை கிழக்கு ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு கரைதுறைப்பற்று ஆகிய பிரதேசசெயலக பிரிவிற்குட் பட்ட காணிப்பிரச்சினைகள் தீர்ப்பதற்கான நடமாடும் சேவையொன்று யூன் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

யூன் 13 ஆம் திகதி இடம்பெற்ற நடமாடும் சேவைக்கு வருகை தந்த மேற்படி மூன்று கிராமங்களையும் சார்ந்த 600 எக்கருக்கு சொந்தமான மக்களுக்கும் மேலதிக செயலாளர் (காணி) தயாரட்ண அவர்களுக்குமிடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது இங்கு கருத்து தெரிவித்த மக்கள் நாங்கள் காலாகாலமாக வயல் செய்து வந்த நிலங்கள் தற்போது மகாவலித்திட்டம் என்ற பெயரில் சிங்கள மக்களுக்குவழங்கப்பட்டுள்ளது உரிமையாளர்கள் நாங்கள் இருக்கும்போது மகாவலித்திட்டம் என்ற பெயரில் எவ்வாறு சிங்கள மக்களுக்கு வழங்கப் படலாம். மகாவலி திட்டத்தில் தமிழர்களுக்கு காணி வழங்க முடியாத நிலையில் ஏன் எங்களுடைய வயல் நிலங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

எங்களுடைய அன்றாட வாழ்வாதாரத்தை உயர்த்தக் கூடிய இந்த விவசாய வயல் நிலங்கள் எமக்குக் கிடைக்காவிட்டால் நீதி கிடைக்கும் வரை உண்ணாவிரதமிருப்போம் என கூறினார்கள். இதற்கு பதிலளித்த மேலதிக செயலாளர் இது தொடர்பாக மகாவலி அதிகாரிகளுக்கு அறியப் படுத்தியிருக்கிறோம் நாங்கள் அவர்களுடன் நேரடியாக சந்திப்பொன்றை ஒழுங்கு செய்து ஒருமாத காலத்திற்குள் உரியபதிலொன்றை பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார்.

# முரண்பாட்டுக்குள் ஐக்கியம் பேணும் இந்தியாவின் இராஜதந்திரம்

முரண்பாட்டிற்குள் ஐக்கியம் பேணும் இராஜதந்திரத்தை இந்தியா தேடுவது வழமையான ஒன்றுதான். அதுவும் அயல் நாடுகளைப் பொறுத்தவரை இந்த இராஜதந்திரத்தை அதிகளவில் பின்பற்றுவதுண்டு. அயலவர்களைப் பகைத்துக் கொண்டு அருகில் வாழ முடியாது என்ற தத்துவம் இதற்கு காரணமாக இருக்கலாம்.



சீனாவுடன் மோடி அரசாங்கம் அத்தகைய இராஜதந்திரத்தையே பின்பற்ற முயற்சிக்கின்றது. புவிசார் அரசியல் காரணமாக ஆசியப் பிராந்தியத்தில் இந்தியா சீனாவுடன் அதிகாரப் போட்டியில் இறங்கியுள்ளது. இலங்கை, மாலைதீவு, நேபாளம், பூட்டான் தொடர்பான விவகாரங்களில் இதனை வெளிப்படையாகவே காணலாம். சீன நீர்மூழ்கிக் கப்பல் விவகாரத்தில் இலங்கையை இந்தியா கடுமையான தொனியில் எச்சரித்திருந்தது. கொழும்புத் துறைமுக நிர்மாணத் திட்டத்தை இலங்கை மீது அழுத்தத்தைப் பிரயோகித்து இந்தியா நிறுத்தியிருந்தது. மகிந்த ராஜபக்ஷ சீனாவின் நண்பர் என்பதற்காக ஆட்சி மாற்றம் ஒன்றையும் இந்தியா கொண்டு வந்திருக்கின்றது. அயல் நாடுகளில் சீன ஆதிக்கம் தொடர்பாகக் கடுமையாக முரண்படும் இந்தியா சீனாவுடனான நேரடி உறவுகளில் அதிக நெகிழ்ச்சித் தன்மையைப் பின்பற்றுகின்றது.

சீனா அங்கம் வகிக்கும் பிரிக்ஸ் அமைப்பில் இந்தியாவும் உறுப்பினராக உள்ளது. பிரிக்ஸ் வங்கி சீனாவில் அமைக்கும் முடிவு எடுக்கப்பட்டபோது அதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்கியது.

மே 14 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி சீனாவிற்கு பயணத்தை மேற்கொண்டிருந்தார். சீனா ஜனாதிபதி "சிஜின் பிங்" மோடியைப் போல தனது சொந்த மாகாணமான சியனில் அவரை வரவேற்றார். இங்கு இரு தலைவர்களும்எல்லைத்தகராறு, வர்த்தகம், போக்குவரத்துக்களை அதிகரித்தல், முதலீடுகளை அதிகரித்தல், இரு நாடுகளுக்குமிடையேசுமூகமானசூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள், தீவிரவாதிகளின் ஊடுருவல்கள் முறியடிப்பதற்கு ஒருங்கிணைந்து செயற்படுதல், ஐக்கிய நாடுகள் சபையின் சீர்திருத்தங்கள், அணுசக்தி விநியோக நாடுகள் குழுவில் இந்தியாவின் உறுப்புரிமை எனப் பல விடயங்களை ஆராய்ந்தார்கள்.

பின்னர் சீனத் தலைநகரான பீகிங் சென்று 12 உடன்படிக்கைகளில் இரு தலைவர்களும்கைச்சாத்திட்டனர். இந்தியாவில் 3000 கோடி டொலர்களை முதலீடு செய்வதற்கு சீன உடன்பட்டது. முன்னர் சீனா ஜனாதிபதி புதுடில்லி சென்ற போது 2000 கோடி டொலர் முதலீடு செய்வதற்கே உடன்பட்டிருந்தார்.

சீனாவுடன் இந்தியா நெருங்கிப் போவதை அமெரிக்கா பெரிதாக விரும்பாது. இதனை சந்தேகத்துடன் பார்க்கலாம். சீனா, இந்தியாஎன்பனஅங்கம்வகிக்கும் பிரிக்ஸ் அமைப்பையும் அது சந்தேகத்துடன் பார்க்கின்றது. அமெரிக்கா சீனாவுடன் மிகப் பெரிய வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தாலும் உலக ஆதிக்கத்தை யார் கொண்டிருப்பது என்கின்ற விடயத்தில் கடுமையாக முரண்படுகின்றது. அமெரிக்காவைப்பொறுத்தவரை முன்னைய சோவியத் யூனியனின் இடத்திற்கு தற்போது சீனா வந்துள்ளது.

ஜப்பான், தென்கொரியா, ரஷ்யா சம்பந்தமான விவகாரங்களில் சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே கடுமையான வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தனது நலன்களுக்கு எதிராக உள்ள ரஸ்யா, ஈரான் என்பவற்றுடன் இந்தியா நெருங்கிய உறவுகளைக் கொண்டிருப்பது அமெரிக்காவின் வியூகங்களுக்கு முட்டுக்கட்டையாக உள்ளது. பாசிஸத்திற்கு எதிரான வெற்றியின் 70 ஆவது வருட நிறைவு விழாவினை ரஸ்யா மாஸ்கோவில் நடத்தியபோது அதில் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கலந்துகொண்டார். அதனைஅமெரிக்கா பெரிதாக ரசிக்கவில்லை.

மோடி தனது சீனப் பயணத்தின்போதுசிலசங்கடங்களையும் சந்திக்கத் தவறவில்லை. அவர் பீகிங் சென்று இறங்குவதற்கு முன்னர் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகை இந்தியாவைக் கடுமையாகத் தாக்கி கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. அருணாசலப் பிரதேசத்தையும் ஜம்மு காஸ்மீரையும் இந்தியாவின் பகுதிகளாகக் காட்டாத வரைபடத்தையும்பிரசுரித்திருந்தது. இது பலத்த சங்கடங்களை மோடிக்கு உருவாக்கியிருந்தாலும் அதனை வெளிக்காட்டவில்லை. எனினும் சீனாவின் ஆக்கிரமிப்புக்கள் அருணாசலப் பிரதேசத்திற்கு சொந்தம் கொண்டாடுதல் தொடர்பாக இந்தியாவின் அதிர்ப்தியைத் தெரிவிக்கவும் தயங்கவில்லை.

சீனா - இந்திய உறவுகள் சுமூகமாகத் தொடருமா? என்பதை தற்போதைக்கு கூற முடியாது. ஆனால் மோடி முரண்பாடு கூர்மையடைவதை தணித்திருக்கின்றார் எனக் கூறலாம்.

# பெருந்தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றன என்பது சுத்தப் பொய்

பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் 2014 ஆம் ஆண்டு 2850 மில்லியன் நட்டமடைந்ததாகத் தோட்டத் துரைமார் சம்மேளனத்தின் தலைவர் ரொசான் ராஜதுரை தெரிவித்துள்ளார். இது சுத்தப் பொய்யாகும். பெருந்தோட்டக் கம்பனிகளில் புசல்லாவ, மத்துரட்ட, அக்கரப்பத்தனை கம்பனிகள் தவிர 17 கம்பனிகள் 2014 ஆம் ஆண்டு முதல் 9 மாதங்களில்92கோடியே82லட்சம்ரூபாவினை தேறிய இலாபமாகப் பெற்றிருக்கின்றன. மூன்று கம்பனிகளின் நிதி அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பெருந்தோட்டக் கம்பனிகள் தொழிலாளர்களின் சம்பள உயர்வை மறுப்பதற்கு இவ்வாறு அடிப்படையற்ற வாதங்களை வைப்பது வழக்கம். கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற் சங்கங்கள்தான் ஆய்வு ரீதியான வாதங்களை தொழிலாளர்கள் சார்பில் முன்வைக்க வேண்டும். ஆனால் துரதிஸ்டவசமாகதொழிற் சங்கங்கள் இவற்றில் அக்கறை செலுத்தவில்லை. தொழிலாளர் களுக்கானசம்பளம்முன்கூட்டியே தீர்மானிக்கப்படுவதால் தேயிலை, இறப்பர் விலை உயர்ந்தாலும் சம்பள அதிகரிப்பு அடுத்த கூட்டு ஒப்பந்தம் உருவாகும்வரை ஏற் படுவதில்லை. 2007 ஆம் ஆண்டிற்கும் 2014 ஆம் ஆண்டிற்கும் இடையே பெருந்தோட்டக் கம்பனிகள் 2306 கோடியே 23 லட்சம் ரூபாவினை தேறிய இலாபமாகப் பெற்றுள்ளன.

தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் குறைந்துள்ளதாக கம்பனிகள் தொழிலாளர்களைக் குற்றம் சாட்டுகின்றன. இதில் உண்மைகள் இருக்கலாம். இதற்குத் தொழிலாளர்கள் பொறுப் பல்ல. தேயிலை, இறப்பர் மரங்களின் பராமரிப்பில் உரிய கவனம் செலுத்தாமை, உரிய காலத்தில் மீள் நடுகை இடம்பெறாமை, புதிய நடுகைகள் இடம்பெறாமை, அறுவடை நாட்களுக்கிடையில் இருக்க வேண்டிய இடைவெளிகளை பின்பற்றாமை என்பவையே காரணமாகும்.

இது முகாமைத்துவ நடைமுறைப் பிரச்சினையே தவிர தொழிலாளர்களது உற்பத்தித் திறன் பற்றிய பிரச்சினையல்ல. உற்பத்தி செலவு கூடுவதற்கு கம்பனிகளின் நிர்வாகச் செலவுகளே காரணம். எனவே தொழிலாளர்களது நியாயமான சம்பள உயர்வை வற்புறுத்த தொழிற் சங்கங்கள் தயங்கக் கூடாது.

இவ்விதழ் இல. 43, 03ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாண...

# மூதூர் தள வைத்தியசாலை போராட்டம் முடிவுக்கு வந்தது

திருகோணமலை, மூதூர் தள வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை மற்றும் பௌதீகக் குறைபாடுகளை சுட்டிக் காட்டி கடந்த முதலாம் திகதி முதல் இடம்பெற்ற போராட்டம் கிழக்கு மாகாண முதலமைச்சரின் உறுதிமொழியை அடுத்து கடந்த (10.06.2015) புதன் கிழமை தற்காலிகமாக கைவிடப் பட்டுள்ளது.



பட்டதாரிகள் சங்கம், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியினர் மற்றும் மாணவர்கள், பிரதேச மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்ட இந்தப் போராட்டம் 10 நாட்களாக இடம்பெற்றது.

இந்நிலையில் 10.06.2015 இல் போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு மாலை 6.30 மணிக்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹபீஸ் நசீர் அஹ்மட் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

அத்துடன் அவர், மூதூர் தள வைத்தியசாலையின் உண்மை நிலவரம் என்ன என்பதை அறிந்து கொள்வதற்காக வைத்தியசாலை வளாகத்தைச் சுற்றிப் பார்வையிட்டதுடன் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் மற்றும் பொது மக்களுடனும் கலந்துரையாடினார்.

இதன்போது வைத்தியசாலைக்குத் தேவையாக இருக்கும் வைத்தியர்கள், தாதியர்கள், பணியாளர்கள் பற்றாக்குறை உடனடியாக நிவர்த்திசெய்யப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும். கிழக்குமாகாண முதலமைச்சர் வைத்தியசாலையில் இருந்தவாறே கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் வைத்தியசாலையின் முக்கிய அதிகாரிகளுடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மேற்குறித்த விடயங்களை எடுத்துக் கூறியதுடன் அதற்கான தீர்வை உடனடியாக வழங்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டதில் ஈடுபட்டவர்களிடம் முதலமைச்சர், போராட்டத்தை உடனே கைவிடுமாறும் அவர்களது கோரிக்கைகளை உடனே நிவர்த்தி செய்வதாகவும் தெரிவித்தார். இதனால் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் போராட்டத்தைக் கைவிடுவதற்கு இணங்கினர்.

குறித்த வைத்தியசாலை ஆதார வைத்தியசாலை என்ற பெயரில் இருந்தாலும் இந்த வைத்தியசாலையின் அடிப்படை வசதிகள்மிகவும்மோசமானநிலைமையில் இருப்பதை அவதானிக்க முடிந்தது என்று முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கண்ணகி கலை இலக்கிய விழா

### வந்தாறுமூலையில் கோலாகலமாக ஆரம்பம்




கண்ணகி இலக்கிய விழாவினை முன்னிட்டு மாபெரும் பண்பாட்டுப்பவனி நடைபெற்றது. ஏறாவூர் ஆறுமுகத்தான்குயிருப்பில் இருந்தும் சித்தாண்டி முருகன் ஆலயத்திலிருந்தும் பவனி இடம் பெற்று வந்தாறுமூலை கண்ணகி அம்மன் ஆலய முன்றிலில் வந்தடைந்ததும் அங்கிருந்து வந்தாறுமூலை விஸ்ணு மகா வித்தியாலயத்துக்கு ஊர்வலம் சென்றது.

அதனைத் தொடர்ந்து அங்கு விழாக்குழு தலைவரும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் தலைமையில் குலவாணிகன் சாத்தனார் அரங்கில் நிகழ்வுகள் ஆரம்பமானது


இரண்டு நாள் கலை நிகழ்வைகொண்ட கண்ணகி கலை இலக்கிய விழாவின் முதல் நாளான கடந்த சனிக்கிழமை (13.06.2015) அன்று கண்ணகி பாடல் மற்றும் வரலாறு அடங்கிய புத்தகம், இறுவெட்டு என்பன வெளியீட்டுவைக்கப்பட்டன.



இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி எஸ்.எம்.சார்ள்ஸ், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ஏ.எல். விக்கிரம ஆராச்சி, கண்ணகி இலக்கிய கூடல் காப்பாளர் பேராசிரியர் சி.மௌனகுரு உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# கிராம மட்டத்திலிருந்து சிறந்த தலைவர்களை உருவாக்கும் செயற்திட்டம் கிழக்கில் ஆரம்பம்

**- இராஜக்கோண் ஹரிகரன்**



கிராமமட்டத்திருந்து சிறந்த தலைவர்களை உருவாக்கும் இளைஞர் வலுவூட்டல் தந்திரோபாய செயற்திட்டம் கிழக்கு மாகாணத்தில் பரவலாக ஆம்பிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் இராஜக்கோண் ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

'மார்க் ரெயினிங் அன்ட் கென்சல்ரன்சி ' என்ற அமைப்பின் ஒழுங்கமைப்பிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிதியுதவியிலும் மற்றும் இது நம்தேசம், மலைமுரசு என்பவற்றின் ஊடக அனுசரணையிலும் இடம்பெறும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் பயிற்சி நெறி கடந்த மாதம் திருகோணமலையில் ஆரம்பிக்கப் பட்டு தற்போது அம்பாறை மட்டக் களப்பு, ஆகிய மாவட்டங்களிலுள்ள இனங்காணப்பட்ட கிராம மட்ட இளைஞர்கள் மத்தியில் மேற்கொள்ளப்படுகின்றது.

குறித்த பயிற்சி நெறி தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளரும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் வளவாளருமான இராஜக்கோண் ஹரிகரன் தெரிவித்ததாவது,

கிராமமட்டத்தில் கல்வி கற்று முடித்து வேலைக்காக காத்திருக்கும் இளைஞர்கள் எம்மால் இனங்காணப்பட்டு அவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியை வழங்குவதே குறித்த வலுவூட்டல் பயிற்சி நெறியின் நோக்கமாகும்.

இந்த பயிற்சி நெறியில் கலந்துகொள்ளும் இளைஞர்கள் குழுவாக செயற்பட்டு கிராம மட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முனைவர். குறிப்பாக ஒரு கிராமத்திலுள்ள இளைஞர்கள் ஆரம்பத்தில் குழுவாக இணைவர். அவ்வாறாக ஏனைய கிராமத்திலுள்ள இளைஞர் குழுக்களும் ஒன்றாக இணைந்து பிரதேச மட்டத்தில் ஒன்றுபடுவார்கள். இவ்வாறு இணையும் குழு இளைஞர் வலுவூட்டல் தந்திரோபாயங்களை செயற்படுத்தும் குழு என அழைக்கப்படும்.



இந்தக் குழுவின் முதற் கட்ட செயற்பாடுகள் கிராமமட்டத்திலுள்ள மக்களுடைய பிரச்சினையைவெளிக்கொணர்வது, அத்துடன் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான பொருளாதார வலுவூட்டல் செயற்பாடுகளை மேம்படுத்த ஆலோசனை, உதவிகளை வழங்குவது மற்றும் கிராம அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பது என்பவையாக இருக்கும்.

குறித்த பயிற்சிநெறியில் கலந்துகொள்ளும்இளைஞர்யுவதிகள் தமது கிராம மட்ட பிரச்சினைகளை எமக்கு தெளிவுபடுத்தி வருவதுடன் தீர்வுத்திட்டம் தொடர்பில் குழுவாக இணைந்து செயலாற்றவும் முன்வந்துள்ளனர். குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட குடும்பங்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் முன்பள்ளி சிறுவர்களுக்கான கல்விபோதித்தல். இளைஞர்களுக் கான சுயதொழில் வேலை வாய்ப்புதொடாப்பான தெளிவூட்டல்கள் அடங்கலாக தமிழ் மக்களின் கலை கலாச்சாரம் பண்பாட்டு விழுமியங்களையும் கற்று வருகின்றனர்.

இத்தகைய வலுவூட்டல் பயிற்சி நெறியினால் இளைஞர்களின் தலைமைத்துவம் கட்டியெழுப்பப்படுவதுடன் சுயதொழில் வேலைவாய்ப்பு என்பவற்றிலும் முன்னேற்றம் ஏற்படும் அத்துடன் கடந்த கால தற்கால அரசியல் போக்கு தொடர்பாக அறிந்து சிறந்த அரசியல் தலைவர்களை உருவாக்கவும் வழிகிடைக்கும் என்றார்.

# தமிழ் முற்போக்குக் கூட்டணி என்ன செய்யப் போகின்றது?

● முத்துக்குமார்

மலையகத்தில் செயற்படும் மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், கொழும்பில் செயற்படும் ஜனநாயக மக்கள் முன்னணி என்பன இணைந்து தமிழ் முற்போக்குக் கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன. ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் இக்கூட்டணியின் தலைவராகவும் மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் லோறன்ஸ் இக் கூட்டணியின் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்கூட்டணியின் இலக்கு என்ன? கொள்கைகள் என்ன? வேலைத்திட்டங்கள் என்ன? என்பது பற்றி எதுவும் கூறப்படவில்லை. பல்வேறு தரப்பட்டவர்களுடன் கலந்துரையாடி அவை பற்றி முடிவு செய்யப்படும் என மனோகணேசன் கூறியுள்ளார். பொத்தாம் பொதுவாக வட- கிடக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்களின் நலன்களில் இக்கூட்டணி அக்கறை கொள்ளும் எனக் கூறப்பட்டுள்ளது.

பொதுவான இலக்கு, கொள்கைகள், வேலைத்திட்டங்களை முன்கூட்டியே தீர்மானித்து பொது உடன்பாட்டிற்கு வந்த பின்னர்தான் கூட்டணி உருவாகுது வழக்கம். ஆனால் இங்கே மட்டும் வண்டிக்கு பின்னே காளைகள் பூட்டப்பட்டுள்ளன.

இக்கூட்டணி தென்னிலங்கையில் பரந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் பணிகளை முன்னெடுக்கும் எனக் கூறினாலும் கூட்டணியில் இணைந்துள்ள கட்சிகள் நுவரெலியா மாவட்டத்திலும் கொழும்பிலும் மட்டுமே அதிகளவில் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன.

இந்தக் கூட்டணி முழுக்க முழுக்க அமெரிக்க - இந்திய சக்திகளின் உற்பத்தி, அவற்றிற்கு வடக்கில் ஒரு எடுபிடி அமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றதோ அதேபோல தென்னிலங்கையிலும் குறிப்பாக மலையகத்தில் அதற்கு ஒரு எடுபிடி அமைப்புத் தேவைப்படுகின்றது. அதாவது தான் விரும்பியபோது கூட்டவும், விரும்பாத போது குறைக்கவும் தக்கதாக அந்த அமைப்பு இருக்க வேண்டும். தமிழ் முற்போக்கு கூட்டணி அதனை நிறைவேற்றும் என்றே எதிர்பார்க்கலாம்.

அமெரிக்க - இந்திய சக்திகளுக்கு தாம் உருவாக்கிய ஆட்சிமாற்றத்தைப் பாதுகாக்க வேண்டும். சிங்கள மக்களின் வாக்குகளை முழுமையாக நம்ப முடியாது. அங்கு 50 வீத வாக்குகள் கிடைத்தாலே வெற்றி. வடக்கு - கிழக்கு வாக்குகளை கூட்டமைப்பு திரட்டிக் கொள்ளும். மலையக மக்களின் வாக்குகளையும் கொழும்பு உட்பட தென்னிலங்கையில் சிதறி வாழும் தமிழ் மக்களின் வாக்குகளையும் முழுமையாகத் திரட்டி வழங்கவேண்டும். ரணில் - மைத்திரி - சந்திரிக்கா கூட்டிற்கு முஸ்லீம் வாக்குகளை முஸ்லிம் கட்சிகள் பார்த்துக் கொள்ளும் என்ற நம்பிக்கை அதற்கு இருக்கின்றது.

வாக்குத் திரட்டல்களுக்கப்பால் எதிர் காலத்திலும் அரசினை தன் செல்வாக்கின்



“ இந்தக் கூட்டணி முழுக்க முழுக்க அமெரிக்க – இந்திய சக்திகளின் உற்பத்தி, அவற்றிற்கு வடக்கில் ஒரு எடுபிடி அமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றதோ அதேபோல தென்னிலங்கையிலும் குறிப்பாக மலையகத்தில் அதற்கு ஒரு எடுபிடி அமைப்புத் தேவைப்படுகின்றது. அதாவது தான் விரும்பியபோது கூட்டவும், விரும்பாத போது குறைக்கவும் தக்கதாக அந்த அமைப்பு இருக்க வேண்டும் ”

கீழ் முழுமையாக வைத்திருப்பதற்கு இக் கூட்டணி உதவும் என அமெரிக்க - இந்திய சக்திகள் நினைக்கின்றன. வடக்கு தற்போது முழுமையான இந்தியாவின் கொலனி. கிழக்கும், மலையகமும் விரைவில் கொலனியாகலாம்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்க ரீதியாகப் பலம் வாய்ந்தது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வாழும் அனைத்துப் பிரதேசங்களிலும் அதற்கு தொழிற்சங்கக் கட்டமைப்பு உண்டு. மலையக அமைப்புகளில் பரந்த பிரதேசங்களில் செயற்படும் ஒரே ஒரு அமைப்பு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்தான். இந்தப் பலத்தினால் மலையகக் கட்சிகளில் ஒப்பீட்டு ரீதியாக சுயாதீனத்தன்மை கொண்ட அமைப்பாக அது இருந்தது. தொண்டமான் இந்தச் சுயாதீனத் தன்மையை அடிக்கடி பயன்படுத்தினார். அப்பயன்படுத்தல்களில் விமர்சனங்கள் இருந்தன என்பது உண்மையே. ஆறுமுகம் தொண்டமான் இந்தச் சுயாதீனத் தன்மையைப் பயன்படுத்தவில்லை என்பது வேறுகதை.

தமிழ் முற்போக்குக் கூட்டணியைக் கொண்டு அமெரிக்க - இந்திய சக்திகள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் சுயாதீனத் தன்மையை பலவீனப்படுத்த முனையலாம். அதனூடாக கூட்டணியுடன் இணையுமாறு அதனை வற்புறுத்தலாம். தமக்கு நட்டம் வருவது நிச்சயம் என உணர்ந்தால் இ.தொ.கா வும் கூட்டணியில் சேரவே முயற்சிக்கும்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தோற்றம் மனோகணேசனுக்கு ஒரு பெரிய வெற்றியே. கொழும்பு என்கின்ற பலவீனமான பிரதேசத்தில் தனது அரசியல் தளத்தைக் கொண்டிருப்பவர் ஒரு கூட்டணிக்கு தலைமை தாங்குதல் கடினமே. உண்மையில் தமிழ்த் தலைமை என்பது வட- கிழக்கில் இருந்தும் மலையகத்திலிருந்துமே வரமுடியும்.

கூட்டணியிலுள்ள ஏனைய தலைவர்களின் பலவீனம் காரணமாக தலைமைப் பதவி மனோகணேசனுக்குக் கிடைத்துள்ளது. இதனை நிச்சயம் ரணில் விக்கிரமசிங்கவும், சம்பந்தனும் விரும்பப் போவதில்லை.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு தனது நிரந்தர வாக்கு வங்கியை மனோகணேசன் கவர்ந்துவிட்டார் என்ற கடுப்பு நிறையவே இருக்கின்றது. சென்ற தேர்தலின் பின்வாக்குறுதியளித்த தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியை மனோகனேசனிற்கு வழங்குவதற்கு இந்தக் கடுப்பே காரணம்.

சம்பந்தனுக்கு இவர் என்ன தலைவராகின்றார் என்ற எரிச்சல். கடந்த தேர்தல்களில் மனோகணேசன் எத்தனையோ தடவை முயன்றும் அவரை ஆதரித்து பகிரங்க அறிக்கை விட சம்பந்தன் முன்வரவில்லை. ஆனால் மனோகணேசன் ஒவ்வொரு தேர்தலிலும் சம்பந்தன் கேட்காமலே கூட்டமைப்புக்கக ஓடியோடிப் பிரச்சாரம் செய்தார். கொழும்பில் தனக்கு நிரந்தரமாக உள்ள வட - கிழக்கு வம்சாவழி வாக்குகளுக்கு சம்பந்தன் இடைஞ்சல் கொடுக்கக் கூடாது என்பது தான் இதற்குப் பின்னாலிருந்த காரணம்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியால் தென்னிலங்கைத் தமிழர்களுக்கு குறிப்பாக மலையக மக்களுக்கு பயன் ஏதாவது கிடைக்குமா? என்பதற்கு அது எவ்வாறு செயற்படப்போகின்றது என்பதன் அடிப்படையிலேயே பதிலைக் கூற முடியும். தென்னிலங்கையில் செயற்படும் தமிழ் அரசியற் கட்சிக்கு மூன்று பணிகள் இருக்கின்றன.

அதில் முதலாவது மலையகத் தேசிய அபிலாசைகளுக்காக உழைப்பது. இதுவே அதன் பிரதான பணியாக இருக்கும். மலையகத் தேசியத்தைத் தாங்கும் தூண்களான நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் என்பன இன்று ஆபத்தான நிலையில் உள்ளன. அதனைப் பாதுகாப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதற்கு வெறுமனவே ஆளும் கட்சி அரசியலில் தங்கி நின்று எதுவும் செய்ய முடியாது. எதிர்க்கட்சி அரசியலையும் நடத்த தயாராக இருக்க வேண்டும். சுதந்திரக்கட்சி ஆட்சியிலிருக்கும் போதாவாது மனோகணேசன் எதிர்க்கட்சி அரசியலைச் செய்ய தயாராக இருப்பார். ஆனால் மற்றைய இரு கட்சிகளும் எப்போதும் ஆளுங்கட்சியிலேயே அங்கம் வகிக்கப்பார்க்கும். மலையக விவகாரத்தை சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாக்கி மலையகத்திற்கு ஒரு சர்வதேசப் பாதுகாப்பு அணையை உருவாக்க வேண்டும்.

மலையக மக்களுக்கான சேமிப்புச் சக்திகளையும் நட்புச் சக்திகளையும் அணிதிரட்ட வேண்டும். வடகிழக்குத் தமிழர்களும் தமிழக மக்களும் உலகெங்கும் வாழும் தமிழக வம்சாவளித் தமிழர்களும் நல்ல சேமிப்புச் சக்திகளாக இருப்பர். அதே வேளை சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகளும் உலகெங்கும் வாழும் முற்போக்கு ஜனநாயகச் சக்திகளும் நல்ல நட்புச் சக்திகளாக இருப்பர். வளர்ந்து வரும் உலகத் தமிழ்த் தேசியவாதத்துடன் தம்மையும் இணைத்துக் கொள்ள மலையக மக்கள் தயங்கக் கூடாது.

இரண்டாவது கொழும்பு உட்பட மலையகத்திற்கு வெளியே வாழும் தென்னிலங்கைத் தமிழர்களுக்கு ஒரு பாதுகாப்புக் கவசமாக இருப்பது. இந்த மக்கள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், குருநாகல் மாவட்டங்களில் சிதறி வாழ்கின்றனர். ஒரு அரசியல் அநாதையாக வாழும் இவர்களுக்கு அரசியல் முகவரியைத் தேடிக் கொடுக்கும் பொறுப்பு உண்டு.

மூன்றாவது வட - கிழக்குத் தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஒரு துணைக் குரலாக இருப்பது. அந்தத் துணைக் குரல் என்பது தமிழ்த் தேசிய அரசியலை பலவீனப்படுத்தும் குரலாக இருக்கக் கூடாது. மாறாக பலப்படுத்தும் குரலாக இருக்க வேண்டும்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி இவற்றைச் செய்யுமா?

நம்பிக்கை வைப்பதற்குரிய தடயங்கள் இன்னமும் தெரியவில்லை.

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி: இல.43,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com தொ.பே.இல: 021 222 3739
இணையம் : www.ithunamthesam.com

# தமிழ் மக்களின் பேரம் பேசும் பலத்தை முறியடிக்கும் முயற்சியே 20 ஆவது திருத்தம்

தேர்தல் முறை மாற்றம் பற்றிய அரசியல் யாப்பின் 20 ஆவது திருத்தப் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது. ஏற்கனவே ரணில் கொண்டு வந்த பிரேரணைக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் தமிழ், முஸ்லீம், மலையகக் கட்சிகளும் ஜே.வி.பி.யும் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கவே அரசாங்கம் பின்வாங்கியது. தற்போது உறுப்பினர்களின் எண்ணிக்கையை 237 ஆக அதிகரித்து இன்னோர் பிரேரணையை உருவாக்கி அதற்கு அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது.

இந்த எண்ணிக்கை விளையாட்டிலும் பேரினவாத சூட்சுமம் இழையோடுகின்றது. ஆனால் தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோகணேசனோ முதற்கட்ட வெற்றி எனப் புளங்காகிதம் அடைகின்றார். அவரது பரிவாரங்களும் அதற்கு பக்கவாத்தியம் இசைக்கின்றன.

புதுப் பிரேரணையின் படி தொகுதிவாரியாக 145 உறுப்பினர்களும் விகிதாசார அடிப்படயில் 55 உறுப்பினர்களும் தேசியப் பட்டியல் மூலம் 37 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். தொகுதிவாரியாக 168 உறுப்பினர்கள் 160 தேர்தல் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்படக் கூடிய நிலை முன்னர் இருந்தது. கொழும்பு – மத்தி, நுவரேலியா – மஸ்கெலியா மட்டக்களப்பு, ஹரிஸ்பத்துவ, பேருவளை போன்றவை பல அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளாக இருந்தன.

இப்பிரேரணையில் 145 உறுப்பினர்கள் மட்டும் தொகுதி வாரியாக தெரிவு செய்யப்படவுள்ளனர். பல அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளையும் சேர்த்தால் இதற்கான தொகுதிகள் 137 ஆகக் குறைய வாய்ப்புக்கள் உள்ளன. அதாவது 160 தேர்தல் தொகுதிகள் எதிர்காலத்தில் 137 ஆகக் குறையும். அதாவது 23 தொகுதிகள் குறைய உள்ளன.

இந்தக் குறைப்புக்கள் எங்கு மேற்கொள்ளப்படவிருக்கின்றது? நிச்சயமாக குறைந்த வாக்காளர்களைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்டத் தொகுதிகளிலேயே இடம்பெறும் எனலாம். இங்கு ஏற்கனவே உள்ள 11 தொகுதிகள் 6 ஆகக் குறையலாம். நுவரேலியா – மஸ்கெலியா, கொழும்பு மத்தி என்பவற்றிலும் எண்ணிக்கைக் குறைப்புச் செய்யப்படலாம்.

தற்போது நடை நடைமுறையிலுள்ள தொகுதிகளை அப்படியே ஏற்றுக் கொண்டால் கூட மனோ கணேசனின் தமிழ் முற்போக்குக் கூட்டணி பிரதிநித்துவப்படுத்தும் மலையக மக்களுக்கோ, கொழும்புத் தமிழ் மக்களுக்கோ எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. மலையக மக்களுக்கு நுவரேலியா – மஸ்கெலியா தொகுதியைத் தவிர வேறு தொகுதிகள் எதுவும் இல்லை. அதனை நான்கு தனித்தனித் தொகுதிகளாக பிரிக்க வேண்டும் என்ற திகாம்பரத்தின் கோரிக்கையும் உடனடியாக நிராகரிக்கப்பட்டது. அப்படிப் பிரித்தால் சிங்கள மக்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்காது என்பதே நிராகரிப்புக்குக் காரணம்.

கொழும்புத் தமிழர்களுக்கு கொழும்பு மத்தி தேர்தல் தொகுதி மட்டுமே உள்ளது. அங்கும் தமிழர் பிரதேசம் கொழும்பு வடக்கிற்குள்ளும், கொழும்பு மத்திக்குள்ளும் பிளவுபட்டிருப்பதால் தமிழ்ப் பிரதிநிதி தெரிவு செய்யப்படுவது கடினம்.

விகிதாசார முறையில் 55 பேரே தெரிவு செய்யப்படவுள்ளனர். ஒரு தேர்தல் மாவட்டத்திற்கு இரு பிரநிதித்துவங்கள் தான் அங்கு நிச்சயம். ஏனைய 11 பிரதிநிதித்துவமும் சனத்தொகை கூடிய மாவட்டங்களுக்கே செல்லும்.

இதன்படி தமிழர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இரண்டும், வன்னியிலும் மட்டக்களப்பிலும் தலா ஒவ்வொரு பிரதிநிதித்துவமும் கிடைக்கலாம். மலையக மக்களுக்கு நுவரெலியாவில் மட்டும் ஒரு பிரதிநிதித்துவம் கிடைக்கும். எனவே இந்த 55 இற்குள் பெரியளவிற்குத் தமிழப் பிரதிநிதித்துவத்தை எதிர்பார்க்க முடியாது.


தேசியப் பட்டியல் வாய்ப்பு இதைவிட மோசம். வடகிழக்குத் தமிழர்களுக்கு ஒன்று மட்டும்தான். மலையக மக்கள் ஒன்றைக் கூட பெறுவது கடினம். பெரும்பான்மைக் கட்சிகளில் தொங்கிக் கொண்டிருந்தால் ஒன்று கிடைக்கலாம்.

நடைமுறையில் உள்ள தேர்தல் தொகுதிகளில் குறைப்புச் செய்யாது உறுப்பினர்களைக் கூட்டி மேலும் பல அங்கத்தவர்கள் தொகுதிகளை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை மனோகணேசன் முன்வைத்திருக்க வேண்டும்.

விகிதாசார பிரதிநிதித்தவ முறையில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்க முடியாது. இதனால் தமிழ் மக்களின் பேரம் பேசும் பலம் அதிகரிக்கும். மலையக மக்களும் தென்னிலங்கையில் சிறிய தொகையில் வாழும் தமிழ் மக்களும் அரசியல் சக்தியாக எழுச்சிபெறுவர். இவற்றைத் தடுப்பதற்காகவே தேர்தல் முறை மாற்றம் கொண்டு வரப்படுகின்றது.

தமிழ் அரசியல் சக்திகள் 20 ஆவது திருத்தத்தில் மறைந்துள்ள பேரினவாத சூட்சுமங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளத் தவறக் கூடாது.

# இருபதாவது திருத்தம் தமிழ் கட்சிகள் திருந்துவதற்கே..!



அருட்தந்தை மா. சத்திவேல்

ஒரு நாட்டின் அரசியல் யாப்புதான் அந் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும். ஆதலால் நிலையானதும் ஜனநாயக மிக்கதும் மக்கள் இனங்களின் தேசியத்தையும் கௌரவத்தையும் பாதுகாப்பதோடு அடிப்படை மனித உரிமைகளை மதித்து சமத்துவத்தை கட்டிக் காக்கின்ற ஒன்றாகவும் இருத்தல் வேண்டும். அத்தோடு கடந்த காலங்களிலும் நிகழ்காலங்களையும் அதன் படிப்பினைகளையும் கருத்திற் கொண்டு நீண்டகால நோக்கில் யாப்பு உருவாக்கப்படுமானால் அது நாட்டின் கௌரவத்தை நிலைக்கச் செய்யும்

ஆனால் இலங்கையின் அரசியல் வரலாற்றில் 1972ம் ஆண்டு இயற்றப்பட்ட யாப்பு சோசலிஸ ஜனநாயகக் குடியரசு எனக் குறிப்பிட்டாலும். ஜனநாயக, சோசலிஸ, மக்களாட்சியின் விழுமியங்களை தூக்கி எறிந்து விட்டு தமிழ் மக்களை புறந்தள்ளியதாகவே அமைந்தது. தொடர்ந்து 1978 ஆம் ஆண்டு ஆறில் ஐந்து பெரும்பான்மையோடு ஆட்சியமைத்த ஐக்கிய தேசிய கட்சி சுயநலத்தோடு புதிய யாப்பினை அறிமுகப் படுத்தியபோதும் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை இனவாதிகளின் தீயோடு சுட்டுப் பொசுக்கி இவ்யாப்பு கடந்த 35 ஆண்டுகளில் அடுக்கடுக்கான திருத்தங்களை கண்டது.

> பாராளுமன்ற அங்கத்தவர் தொகையில் 255, 225, 237 என இலக்க விளையாட்டுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதில் பெரிய கட்சிகளான சிங்கள இனவாத கட்சிகள் தமது சுயநல அரசியல் சித்து விளையாட்டுகளை மையமாக வைத்தே காய்களை நகர்த்துகின்றன. சிறிய கட்சிகளை, வேறு இனங்களின் கட்சிகளை மதிக்காத நிலையே தோற்றமளிக்கின்றது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்காகவே கின்னஸ் சாதனை கொடுக்கப்படல் வேண்டும் என்பதோடு இரண்டாவது கின்னஸ் சாதனையாக வேறு இனங்களுக்கு குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் இருப்பை தகர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்காக கொடுக்கப்படல் வேண்டும். முக்கியமாக 6 வது திருத்தம் தமிழ் மக்களுக்கெதிராகவே கொண்டுவரப்பட்டது. ஜனநாயக மயப்படுத்தலுக்காக கொண்டு வரப்பட்டதாவது திருத்தம் மூலம் தமிழ் மக்கள் அனுபவித்ததொன்றும் இல்லை எனலாம். தொடர்ந்து 18 ஆவது திருத்தம் கொண்டுவரபட்டபோது ஜனாதிபதியின் அதிகாரத்தை அதிகரித்தது மட்டுமல்ல அதுவரை காலமும் மாதாந்தம் பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் நிரந்தரமாக்கப்பட்டது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட 19வது திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்த போதும் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பான விடயம் அகற்றப்படவில்லை. ஒடுக்குதல் என்பது தொடர்ந்து நீடிக்கும் என்பதையே இது சுட்டிக் காட்டுகின்றது.

இந்நிலையில் 20 ஆவது திருத்தமாக தேர்தல் திருத்தச்சட்டம் அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்றபோதும் பாராளுமன்ற அங்கத்தவர் தொகையில் 255, 225, 237 என இலக்க விளையாட்டுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதில் பெரிய கட்சிகளான சிங்கள இனவாத கட்சிகள் தமது சுயநல அரசியல் சித்து விளையாட்டுக்களை மையமாக வைத்தே காய்களை நகர்த்துகின்றன. சிறிய கட்சிகளை, வேறு இனங்களின் கட்சிகளை மதிக்காத நிலையே தோற்றமளிக்கின்றது.

தொகுதிகள் உருவாக்கப்பட்டால் விசேடமாக மலையக தமிழ் கட்சிகளின் தலையில் மண்விழும் எல்லை நிர்ணயம் இது இன்னும் தெளிவாகும். ஆதிக்கவாத சிங்கள இனவாத பெரும்பான்மை கட்சிகள் தமிழ் மக்களை ஒடுக்குவதிலேயே முனைப்பாக நிற்கின்றன. இவற்றுக்கு மத்தியில் விருப்பு வாக்குமூலம் தமக்கு ஓரிரு ஆசனங்கள் கிடைத்தால் போதும் என்ற நோக்கில் முற்போக்கு கூட்டணி தலைவர் பிற்போக்கு தனமாக "எமக்குக் கிடைத்த முதல் வெற்றி" என்கின்றார்.

அதன் இணைத் தலைவர்களின் ஒருவரான பழனியானவர் பேசவேண்டிய இடத்தில் அடக்கி வாசித்துவிட்டு மக்கள் மத்தியில் நின்று மக்களுக்கு பாதிப்பு வந்தால் சூலாயுதத்தை கையிலெடுப்பேன் என்கிறார். நல்லாட்சிக்காக உழைத்தவர்கள் அமைச்சரவை நாற்காலியில் இருக்கும் போது ஏமாற்றப்படுகின்றார்கள்.

20வது திருத்தத்தின் மூலம் தமிழர்கள் குறிப்பாக மலையகத் தமிழர்கள் மீண்டும் ஒருமுறை ஏமாற்றப்பட போகின்றார்கள் என்பது மட்டும் உறுதி. பாராளுமன்ற ஆசனங்கள் கிடைத்தால் வெற்றி என்பது வெறும் பதவிகளையும் பதவிக்கான சலுகைகளையும் மட்டுமே குறிப்பதாக அமையும். மக்களின் வெற்றியாக அமையுமா? நல்லாட்சி என்பது கானல் நீர் தானா? மைத்திரியும் தமிழ் மக்களுக்கு இன்னுமொரு மாய மானே. கூட்டணியாளர்களே வலையில் சிக்குவது நீங்கள் அல்ல. உங்களுக்கு வாக்களித்த மக்கள்.

மலையக மக்களின் வாழ்க்கை வரலாற்றில் அமைச்சரவையில் தனி ஒருவர் இருந்த காலமுமுண்டு. தற்போது பலர் பாராளுமன்ற கதிரைகளை அலங்கரித்தப் போதும் மலையகத்துக்குள் குடும்பிச் சண்டை நாற்றமெடுக்கின்றது. மக்களுக்குத் தேவை இனங்களின் தனித்துவம் காக்கும் சுய நிர்ணயமும் ஜனநாயகமும் நிறைந்த புதிய யாப்பே தவிர திருத்தங்கள் அல்ல. பழைய கூட்டணியும் புதிய கூட்டணியும் கருத்திற் கொள்ளுமா?

# கொடூர சித்திரவதைகளின் பின்னர் கொல்லப்பட்ட ரகர் வீரரின் கொலையாளி யார்?

**ஆக்கம் - டிரன் குமார பங்கமாராச்சி**
**தமிழில்: நட்டாஷா ராஜ்குமார்**
**நன்றி : ராவய (12.06.2015)**

**2012** ஆம் ஆண்டு வைகாசி மாதம் 17 ஆம் நாள் நாரா ஹென்பின்டியவில் அமையப்பெற்றுள்ள பார்க் வீதியில் ஷாலிகா விளையாட்டு திடலிற்கு அருகில், நடு வீதியில் மோட்டார் வண்டியொன்றிற்குள் எரியுண்டு கிடந்த மொஹமட் வசீம் தஜீடின் எனப்படும் ரகர் வீரரின் சடலமானது ராஜபக்ச ஆட்சிகாலத்தில் வாகன விபத்தின் பொழுது ஏற்பட்ட தீயின் காரணமாக நிகழ்ந்த சாதரண விபத்தென குறிப்பிடப்பட்டது.

மைத்திரி அரசாங்கத்தினால் வெளிப்படுத்தப்படுகின்ற ராஜபக்ச அரசாங்கத்தின் மோசடிகளுக்குள் ஒன்றான தஜீடினின் மரணமானது வாகன விபத்தினால் நேரிட்டது அல்ல மாறாக அது கொலையே என்பதுடன் அம்மரணம் தொடர்பில் மீள் விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு மாசி மாதம் 16 ஆம் நாள் புலனாய்வுப் பிரிவினரால் மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டன.

புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கையின் அடிப்படையில் தஜீடினின் மரணம் தொடர்பாக நீதிமன்றில் சமர்பிக்கப்பட்ட சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை மற்றும் அரசாங்க இரசாயன பகுப்பாய்வு அதிகாரிகளின் அறிக்கை ஆகியன ஒன்றிற்கொன்று முற்றிலும் முரணாகவே இருந்தது. எனவே, இம்மரணம் தொடர்பில் பலத்த

**காதலின் பலனாக வீட்டிற்குள்ளேயிருந்த யசாரா தேசிய தொலைக்காட்சி நிறுவனமான ரூபவாஹினியின் ஐ அலைவரிசையின் நிறைவேற்று தயாரிப்பாளராக நியமிக்கப்பட்டார். இறுதியில் அவர் ஜனாதிபதியின் புதல்வரிற்குச் சொந்தமான சி.எஸ்.என் தொலைக்காட்சியின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார்.**

சந்தேகம் எழுந்துள்ளதாகக் கடந்த வியாழக் கிழமையன்று புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு பிரதான நீதவானிடம் அறிவித்தனர்.

இப்பரஸ்பர வேறுபாடுகள் தொடர்பாக நீதிபதியிற்கு அறிவித்து அவரது அறிவுரைகளை வேண்டி நிற்பதாக கொலைகள் தொடர்பான விசாரணை குழுவின் அதிகாரி (கொழும்பு) மஜேத்திரார் நிசாந்த பீரிஸி தெரிவித்தார்.

இரசாயன பகுப்பாய்வு அறிக்கை மற்றும் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை ஆகியன ஒன்றிற்கொன்று முரண்படும் வேளையில் அது தொடர்பாக அறிக்கையிட்ட ஆனந்த சமரசேகர, சி.கே. ராஜகுரு, ஸ்ரீயந்த அமரத்ன மற்றும் தயானி வீரரத்னா ஆகியோரை நீதிமன்றின் முன் ஆஜராக்க வேண்டியுள்ளது. அம் முரண்பாடுகள் தொடர்பாக விசேட நிபுணர்கள் பகுப்பாய்வு செய்ய வேண்டும். தஜீடின் கொலையிலுள்ள ஒழிவு மறைவுகளை நிவர்த்திசெய்யும் பொருட்டே இவ்வறிக்கையினை மீண்டுமொருமுறை வாசிக்குமாறு புலனாய்வுப் பிரிவினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

புலனாய்வுப் பிரிவினர் அத்துடன் நின்றுவிடவில்லை. 2012 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 17 ஆம் நாள் தஜீடினின் கைத்தொலைபேசிக்கு வந்த தொலைபேசி அழைப்புகள் தொடர்பாகவும் விசாரணைகளை முன்னெடுக்க நீதிமன்றிடம் அனுமதிகோரியுள்ளனர். எனவே, இவ் விசாரணைகளானது மேலும் விரிவடைந்துள்ளது.

தஜீடினின் மரணம் ஏன் இவ்வளவு முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது? ஏனெனில் அது சாதாரண மரணமன்று மாறாக கொலையே. இது அக்கால ராஜபக்ச ஆட்சியிலிருந்த ஒரு பிரபலரும் இம்மரணத்துடன் தொடர்புபட்டுள்ளமையினாலாகும். ராஜபக்ச புதல்வர்களுடன் கல்கிசை புனித.தோமையார் கல்லூரியில் ரகர் விளையாடிய தஜீடினின் இறப்பு ரகர் விளையாட்டை உயிருக்கும் மேலாக அன்பு செய்கின்றோமென கூறும் ராஜபக்ச புதல்வர்களுக்கு ஏன் தெரியாமலிருந்தது? அக்காலத்தில் ராஜப்கசாவின் மீதிருந்த அச்சம் காரணமாக வாகன விபத்தில் கொல்லப்பட்டாரென கூறப்பட்ட தஜீடினின் மரணமானது இன்று எவ்வாறு கொலையாக மாறியது?

## யோஷிதவின் பெயர் அடிப்படுதல்

தஜீடின் மரணத்துடன் முன்னாள் ஜனாதிபதியின் புதல்வாரன யோஷிதவின் பெயர் தொடர்புபட்டது எவ்வாறு? அது ரகர் உலகிற்குள் அனைவரும் அறிந்த உண்மையே. யஷாரா அபயநாயக்கவே யோஷிதவின் காதலி. இக்காதல் காரணமாக யஷாரா பல மைல் தூரம் கடந்துசெல்ல நேரிட்டது. அதற்கு முன்னர் இச்சம்பவம் தொடர்பாக குறுகிய விளக்கமொன்றை தர விரும்புகின்றேன். யசாராவின் தந்தையின் பெயர் ஆனந்த அபயநாயக்க. அவர் காமினி பொன்சேகாவின் மகளையே திருமணம் முடித்துள்ளார். அக்காலத்தில் காமினி பொன்சேகாவின் "நொமியன மினிஸ்சு" எனும் சிங்கள திரைப்படத்தில் நடித்த காலம் முதலே முன்னாள் ஜனாதிபதியும் யசாராவின் தந்தையும் அறிமுகமாகி பிற்காலத்தில் சிறந்த நண்பர்களாயினர்.





தந்தையரின் தோழமை மூலமாக பிள்ளைகளும் பிற்காலத்தில் நண்பர்களாயினர். அது காலமாற்றத்துடன் காதலாக உருமாறியது. காதலின் பலனாக வீட்டிற்குள்ளேயிருந்தயசாராதேசியதொலைக்காட்சி நிறுவனமான ரூபவாஹினியின் ஐ அலைவரிசையின் நிறைவேற்று தயாரிப்பாளராக நியமிக்கப்பட்டார். இறுதியில் அவர் ஜனாதிபதியின் புதல்வரிற்குச் சொந்தமான சி.எஸ்.என் தொலைக்காட்சியின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் நியமிக்கப் பட்டார்.

## தஜீடினின் வருகை

மேற்குறிப்பிட்ட கதையில் தஜீடின் கதாபாத்திரம் எவ்வாறு ஒன்றிணைகின்றது? ரகர் உலகத்திலே ராஜபக்ச புதல்வர்கள் திறமைச்சாலிகள் அல்ல என்பதனை ரகரைப்பற்றி நன்கறிந்தோருக்கு விசேடமாக கூறவேண்டியதில்லை. அக்காலத்தில் நாம் இது தொடர்பில் பல்வேறுபட்ட கடிதங்களை வெளியிட்டோம். கல்கிசை புனித.தோமையார் கல்லூரியில் நாமல் ரகர் விளையயாடும் காலங்களில் திறமையானோர் பலர் இருந்தனர். தஜீடினும் ராஜபக்ச புதல்வர்களின் சம வயசையொத்த சிறந்த ரகர் வீரராவார். அக்காலத்தில் ராஜபக்சவினர் தஜீடின் அடிக்கும் பந்தை பிடித்துக்கொண்டு சென்றனர். தோமையார் கல்லூரியின் ரகர் பயிற்றுவிப்பாளரான அசங்க சேனவிரத்ன ராஜபக்சாவினர் மீது விசேட கவனம் செலுத்தாமையினால் அவருக்கு பாடசாலை ரகர் குழுவில் இடம் கிடைக்கவில்லை. இதனால் அசங்க சேனவிரத்ன மிகவும் இரகசியமான முறையில் பலமைல்கள் கடல்கடந்து சென்றுவிட்டார். ஆரம்பகாலம் முதலே ராஜபக்ச புதல்வர்களின் எதிரியாக திகழ்ந்த தஜீடின் அவரது தலையெழுத்து காரணமாகவோ என்னவோ யாசாராவின் காதலராயிருந்துள்ளார். அக்காலத்தில் அவர் ரகர் நட்சத்திரமாகும். தஜீடினிடமிருந்து பிரிந்த யசாரா யோசித்தவின் காதலியானாள். தஜீடின் ராஜபக்சவினரின் அதிகார பலத்தை சிறிதளவேனும் பொருட்படுத்தாது யாசாராவுடன் கடந்தகாலங்களில் அவருக்கிருந்த நெருங்கிய தொடர்பினை பல நண்பர்களிடம் பகிரங்கமாககதைத்ததாககூறப்படுகின்றது. அது இறுதியாக யோசித்தவிடம் நேருக்கு நேர் சவால்விடும் அளவிற்கு பிரச்சினை வளர்ந்துள்ளது. அதன் விளைவாக பிளவர்டிரம் உணவகத்தில் வைத்து பாதுாரமான வாய்தர்க்கம் இருவரிடையேயும் ஏற்பட்டுள்ளது.

## தஜீடினின் மரணம்

பிரபல்யமற்ற ஒரு சிலரிடையே மாத்திரம் நிகழ்ந்த இப்பிரச்சினையானது திடீரென அறியப்பட்ட செய்தியொன்றுடன் மாபெரும் குண்டாக வெடிக்கின்றது. அச்செய்தி யாதெனில் இருபத்து மூன்று வயது நிரம்பிய தஜீடின் எனப்படும் ரகர் விளையாட்டு வீரர் வாகன விபத்தில் கொல்லப்பட்டுள்ளார். ஆனால் மேற்குறிப்பிட்ட கதையில் இது வெறுமனே வாகன விபத்தன்று திட்டமிட்டு செய்யப்பட்ட கொலையென அறிகுறிகாட்டியது. இறக்கும் பொழுது தஜீடின் திருமணம் புரிந்து, ஒரு பிள்ளையின் தந்தையாவார். தஜீடின் நேருக்கு நேர் மோதிய எதிரி என்றபோதும் அவரை கொலைசெய்ய வேண்டுமா?

## ராஜபக்ச காலத்தில் பொலிஸ்

இக்கொலை தொடர்பாக அக்கால பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹன பல புதுமையான கதைகளைக் கூறினார். அதாவது வண்டியை வேகமான ஓட்டியமையினாலேயே இவ்விபத்து நேர்ந்ததாக அவர் தெரிவித்தார்.

இரு வழிப்பாதைகளைக் கொண்டு ஒரு நேர் பாதையில் மரம் மற்றும் சிறிய பெட்டிகடையொன்றுக்குள்ளால் சென்ற வாகனம் ஷாலிகா விளையாட்டரங்கு மதிலில் மோதுண்டுள்ளதென குறிப்பிட்டார். தஜீடினின் மரணம் இவ்வாறாகவா நிகழ்ந்துள்ளது? அதிக வேகத்திலா வாகனம் பயணித்துள்ளதென்பதை டயர்களின் தேய்மானத்தின் மூலமாக அறிந்துகொள்ளலாம். ஏன் பொலிஸார் அதுதொடர்பிலான சாட்சியங்களை சேகரிக்கவில்லை?

(தொடரும்)


- எஸ்.ஜெயானந்தமூர்த்தி

# எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமை தாய்மண்ணே...!

## அழிக்கப்பட்ட தமிழ்க் கிராமங்கள்
## வடமுனை

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களில் ஒன்றுதான் வடமுனை. இந்த கிராமம் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு கிராமமாகவும் உள்ளது. மட்டக்களப்பு நகருக்கு வடமேற்காக சுமார் அறுபது கிலோ மீற்றருக்கு அப்பால் பொலநறுவை - மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் பகுதியில் இக்கிராமம் அமைந்துள்ளது. வயலும் வயல்சார்ந்த நிலமுமாக பயிர்ச் செய்கைக்கு மிகவும் சிறந்த மண் அமைப்பைக் கொண்டதுமாக அமைந்துள்ளதுடன் கிராமத்தின் குறுக்காக மாந்தனையாறு (மதுறுஓயா) கங்கையும் ஓடுகின்றது. உப உணவுச் செய்கையிலும் தன்னிறைவும் காட்டில் வேட்டையாடிஇறைச்சிமற்றும்தேன்போன்ற போசன உணவைப் பெற்றது மாத்திரமன்றி வடமுனைக் குளத்திலும் நல்ல மீனும் கிடைத்தது. இதனால் இந்த பகுதியை ஆக்கிரமித்து சிங்களக் குடி யேற்றங்களைத் திட்டமிட்டு ஏற்படுத்துவதற்கு சிறிலங்கா அரசும் அதன் அமைச்சர்களும் பல பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தனர்.

உண்மையில் இக்கிராமத்தின் ஆரம்பம் 1967 முற்பட்டதாக உள்ளது. இக்காலப்பகுதியில் வந்தாறுமூலையைச்சேர்ந்த சிலர் இப்பகுதிக்குச் சென்று காடு வெட்டி குடியேற்றங்களைச் செய்தனர்.

1967 ஆம் ஆண்டில் அதற்குப் பிற்பட்ட காலங்களில் படிப்படியாக முந்நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கு குடியேறின. இதனால் அப்பகுதி மெல்ல மெல்ல இந்தக் கிராமம் வளர்ச்சியடைவது பொலனறுவைப் பகுதி சிங்கள மக்களுக்குப் பிடிக்கவில்லை. சிறிலங்கா அரசுக்கும் இப்பகுதியில் குடியேற்றங்களைச் செய்ய வேண்டுமென்ற திட்டமிருந்தது.

இவ்வாறான நிலையில் 1983 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தின் போது யூலைக் கலவரம் முடிவடைந்த கையோடு அப்போதைய கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் சிறில் மத்தியூ அவர்கள் வடமுனைப் பகுதியில் பாரியளவில் சிங்களக் குடியேற்றமொன்றைச் செய்தார். ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் ஒரே நாளில் வடமுனையை அண்டிய பகுதியில் குடியேற்றம் செய்யப்பட்டனர். இதற்கு உடந்தையாக திம்புலாகல விகாரையின் தேரர் சீலாலங்கார தேரர் இருந்தார்.

பாரியளவில் படையினரின் உதவியுடன் இக்குடியேற்றம் நடைபெற்றதால் வடமுனை கிராமத்தில் வாழ்ந்த மக்கள் அச்சத்தினால் இரவோடிரவாக இடம்பெயர்ந்து மீரான்வில், கானாந்தனை, பெண்டுகள் சேனை போன்ற கிராமங்களில் தஞ்சமடைந்தனர்.

இந்த குடியேற்றத்தை அறிந்து அப்போதைய அரசில் அங்கம் வகித்த கல்குடா தொகுதி நாடளுமன்ற உறுப்பினரும் நீதி அமைச்சருமான கே.டபிள்யூ. தேவநாயகம் அவர்கள் அரச அதிபர் திரு.அந்தோனி முத்து மற்றும் அதிகாரிகளையும் அங்கு அழைத்துச் சென்று குடியேற்றத்தை அகற்றுவதற்கான நடவடிக்கையை எடுத்தார். அங்கு ஆக்கிரமித்திருந்த சிங்களவர்கள் வெளியேறியதன் பின்னர் வடமுனைக் கிராமத்திலிருந்து பயத்தினால் இடம்பெயர்ந்து சென்ற கிராம வாசிகள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கினார்கள்.

இக்கால கட்டத்தில் காந்தியம் அங்கு பண்ணை ஒன்றை அமைத்தது. அத்துடன் அங்கு குடியேறி வாழ்ந்த மக்களுக்கு காந்தியம் விவசாயச் செய்கையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ததுடன் இப்பண்ணையிலும் வேலை வாய்ப்பையும் கொடுத்தது. அத்துடன் உள்ளீடுகள் மற்றும் உரம் என்பனவற்றையும் வழங்கியதுடன் விவசாயச் செய்கை தொடர்பான மேலதிகமான ஆலோசனையும் வழங்கியது.

1985.09.01 ஆம் திகதி கொழும்பு - வெலிக்கந்தை வீதியில் சென்ற இராணுவ வாகனமொன்று கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்கானது. அத்தாக்குதலின்போது 13 இராணுவத்தினர் பலியானர்கள். இதையடுத்து சில தினங்களின் பின்னர் அதாவது 7 ஆம் திகதி வடமுனைக் கிராமம் இராணுவத்தினரால்சுற்றிவளைக்கப்பட்டது. இச்சுற்றிவளைப்பின்போது 209 ஆண்கள் வயது வித்தியாசமின்றி கைது செய்யப்பட்டு முகாமுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். இவ்வாறு அழைத்துச்செல்லப்பட்டவர்கள்பின்னர் காலியில் அமைந்திருந்த பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர். இச்சுற்றிவளைப்பின்போது ஆண்கள் படையினரால் கைது செய்யப்பட்டதை அடுத்து அங்கு மக்கள் தொடர்ந்து வாழ்வதற்கு அஞ்சியதன் காரணமாக பலர் இடம்பெயர்ந்து சென்றனர். இதனால் வடமுனை கிராமம் சோவையிழந்தது.

1986 ஆம் ஆண்டில் படையினர் வடமுனை பாடசாலையில் முகாமொன்றை அமைத்தனர். அங்கு முகாம் அமைத்தது மாத்திரமின்றி மக்கள் மீது தாக்குதல் நடத்தினர். அவர்களின் உடைமைகள் குறிப்பாக கால்நடைகளைக் கொன்று உணவுக்குப் பயன்படுத்தினர். மக்களைக் கொண்டு முகாமுக்குத் தேவையான வேலைகளைச் செய்தனர். எனினும் மக்களை கிராமத்தைவிட்டு வெளியேற விடாது ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலை போன்று வடமுனையை மாற்றினர்.

எனினும் படையினரின் பிடியிலிருந்து பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து பெண்டுகள்சேனை, முறுத்தானை, வாழைச்சேனை போன்ற கிராமங்களுக்குச் சென்றனர். இதையடுத்து 1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்து இந்தியப் படையினர் வடமுனைப் பகுதியிலும் முகாமிட்டனர். இதையடுத்து இடம்பெயர்ந்து சென்றவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத்திரும்பினர். எனினும் கிராமம் முற்றாக அழிக்கப்பட்டிருந்தது. இவர்களின் வீடுகள் உடைக்கப்பட்டிருந்தன. வயல்வெளிகள் காடுமண்டிக் கிடந்தன.

1990 யூன் மாதம் 16 ஆம் திகதி இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சண்டை தொடங்கியது. வடமுனைன கிராமத்தை நோக்கியும் எறிகணைத் தாக்குதல்களும் விமானக் குண்டுத் தாக்குதல்களும் இடம்பெற்றன. அக்காலகட்டத்தில் பரவலாக எல்லா இடங்களிலும் தாக்குதல்கள் இடம்பெற்றன. இக்காலகட்டத்தில் வடமுனை கிராமத்தில் 30 இற்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். இதனால் கிராமத்தியில் பலர் இடம்பெயரத் தொடங்கினார்கள்.

இச்சம்பவம் இடம்பெற்று நான்கு மாதத்திற்குப் பின்னர் 1991.08.02 ஆம் திகதி மாலையில் ஒரு கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் புனானை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர்தான் தாக்குதலுக்கு இலக்கானார்கள். இதில் கப்டன் எதிரிசிங்க உட்பட 27 படையினர் பலியானார்கள். பலர் காயமடைந்தனர்.

படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டும் குடிசைகளை எரித்துக் கொண்டும் வந்ததையடுத்து கிராம மக்கள் நாலா திசையும் தப்பியோடி காடுகளில் தஞ்சமடைந்தவர்கள் ஒருவாறாக மறுநாள்தான் ஒன்று சேர்ந்தனர். இச்சம்பவத்தில் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் சடலங்களைக் கூட உறவினர்கள் அக்கம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து இக்கிராமத்திலிருந்து முற்றுமுழுதாக மக்கள் வெளியேறினர். இவர்கள் பெண்டுகள்சேனை, முறுத்தானை, அலியாரோடை போன்ற பகுதிகளில் சில நாட்கள் தங்கியிருந்துவிட்டு பின்னர் வாழைச்செனைக்குச் சென்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்து சென்றவர்கள் பின்னர் பேத்தாளையில் அமைக்கப்பட்ட அகதி முகாமில் நிரந்தரமாகத் தங்கிவிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை அழிக்கப்பட்ட தமிழ் கிராமங்களில் எல்லைக் கிராமமான வடமுனையும் மிகவும் முக்கியமானதாகும். நீண்டகாலமாகத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தடை செய்யப்பட்டதை அடுத்து சிறிலங்கா அரசு இக்கிராமத்தை அழித்து மக்களையும் வெளியேற்றியது.

தற்போது சிறியளவில் மக்கள் குடியேறியுள்ளனர். அவர்களைப் பாதுகாப்பது தமிழ் மக்கள் அனைவரினதும் கடமையாகும்.



# தமிழ் மக்களுக்கு ஒ
# சிங்கள மக்களு
# ஜனநாயகமும் பின்

## இலங்கை ஆசிரிய
## ஜோசேப் ஸ்ராலினுட

**ஆட்சிமாற்றத்திற்குப் பின்னரான இலங்கையின் அரசியல் சூழல் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

பதில் : ஆட்சிமாற்றத்தின் மூலம் ஜனநாயகசூழல் உருவாகும் எனமக்கள் எதிர்பார்த்தனர். 19வது திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் நாடு முழுவதற்குமான ஜனநாயக சூழல் கட்டியெழுப்பப்பட்டுள்ளது எனக் கூற முடியாது. வடக்கில் ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர். அங்கு இன்னமும் கெடுபிடிகள் பெரியளவிற்கு குறைந்ததாகத் தெரியவில்லை. மாணவி வித்தியாவின் கொலைக்கு எதிரான போராட்டங்களைத் தொடர்ந்து இராணுவப் பிரசன்னம் அதிகரித்துள்ளது. படையினர் டாங்கிகளுடன் வீதி ரோந்தில் ஈடுபடுகின்றனர். தெற்கில் இவ்வாறான ஜனநாயக போராட்டங்களைத் தொடர்ந்து வீதி ரோந்துகள் இடம்பெறுகின்றனவா?

இங்கு தமிழ் மக்களுக்கு ஒரு ஜனநாயகமும் சிங்கள மக்களுக்கு இன்னோர் ஜனநாயகமும் பின்பற்றப்படுகின்றது. இது ஏற்கத்தக்கதல்ல. மைத்திரிபால சிறிசேன தமிழ், முஸ்லீம், மலையக மக்களின் வாக்குகளையும் பெற்றுத்தான் தெரிவாகினார். குறிப்பாக 2005 ஆம் ஆண்டுத் தேர்தலைப் போல தமிழ் மக்கள் தேர்தலைப் பகிஸ்கரித்திருந்தால் மைத்திரி தெரிவாகியிருக்க முடியாது. எனவே ஜனநாயகத்தில் வேறுபாடு காட்டப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

19 வது திருத்தத்தின் மூலமும் ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவில்லை. ஜனாதிபதியின் அதிகாரங்களுக்குத் தடைகள் சில மட்டும் போடப்பட்டுள்ளன. ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்தால் பிரிவினைவாதம் வளரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதிகாரம் இழந்தால் வடகிழக்கில் தமிழ்த் தேசியவாதம் வளரும் என தமிழ் மக்கள் தொடர்பாக சந்தேகம் தெற்கில் கிழறப்பப்படுகின்றது. தமிழ் மக்களினது வாக்குகளின் மூலம் வென்றதனால் சந்தேகம் கொள்கின்றனர். தமிழ் மக்கள் திறந்த மனதோடு இருந்தாலும் சந்தேகத்தை வளர்க்கப் பார்க்கின்றனர். இது மிகவும் துரதிஸ்டவசமானது.

**19வது திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் அதிகாரங்களில் மட்டுப்படுத்தல்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள் குறைந்த பட்சம் தென்னிலங்கையிலாவது ஜனநாயகச் சூழலை கொண்டுவரும் என நீங்கள் கருதுகிறீர்களா?**

பதில் : ஜனாதிபதி அரசாங்க முறைக்கு எதிராக என்.எம்.பெரேரா தொடக்கம் 37 வருடமாக பலர் போராடி வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சிதான் 1978 ஆம் ஆண்டு யாப்பு மூலம் இதனைக் கொண்டு வந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட எல்லாக் கட்சிகளும் இதனை எதிர்த்திருந்தன. 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கான சந்திரிகாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி முறை ஒழிப்பது பற்றிக் கூறப்பட்டது. அன்று எதிர்த்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி இன்று ஒழிக்க வேண்டாம் எனக் கூறுகின்றது. இதற்குக் காரணமாக பிரிவினைவாதம் வளரும் எனக் கூறுகின்றது.

19 ஆவது திருத்தத்தில் நாம் நினைத்தது போல மாற்றங்கள் வரவில்லை. இதனால் எதிர்பார்த்த ஜனநாயகம் வரும் எனக் கூறமுடியாது. எனவே ஜனநாயகத்திற்கான எமது போராட்டத்தை இதனுடன் நிறுத்தக் கூடாது. 19 ஆவது திருத்தம் ஒரு சந்தி மட்டும்தான். போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். அதனூடாக ஜனாதிபதி முறையினை முழுமையாக இல்லாமல் செய்ய வேண்டும். 19 வது திருத்தத்தின் குறைந்தளவு வெற்றியாவது கிடைக்குமா என்பதை நடைமுறையில் தான் பார்க்க வேண்டும்.

**ஜனாதிபதி முறையை நீக்கி பாராளுமன்ற முறையை மீண்டும் கொண்டு வர விரும்புகின்றீர்கள். பாராளுமன்ற முறை முழுமையான ஜனநாயகத்தை பெற்றுத் தரும் என நீங்கள் நம்புகிறீர்களா?**

பதில் : ஆளும் கட்சியின் செல்வாக்கு பாராளுமன்றத்தில் அதிகரித்தால் ஜனநாயகம் இல்லாமல் போகும். செல்வாக்கு குறைந்தால் தான் ஜனநாயகம் வெளிவரும். பாராளுமன்ற முறையில் தனிநபரிடம் ஆட்சி அதிகாரம் கையளிக்கப்படாமல் ஒரு குழுவான அமைச்சரவையிடம் கையளிக்கப்படுகின்றது. அமைச்சரவைதான் மேற்கொள்ளும் அனைத்து கருமங்கள் தொடர்பாகவும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறுகின்றது. அமைச்சரவை உறுப்பினர்களை கேள்வி கேட்கும் உரிமை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. இதனால்தான் ஜனாதிபதி முறையை விட பாராளுமன்ற முறை ஜனநாயகத் தன்மை வாய்ந்தது எனக் கூறப்படுகின்றது.

ஆனால் பிரதமரே ஆளும் கட்சியின் தலைவராகவும் அமைச்சரவையின் தலைவராகவும் இருப்பதால் பாராளுமன்றத்தில்ளும் கட்சிக்கு வலுவான பெரும்பான்மை இருப்பின் பிரதமர் சர்வாதிகாரியாகத் தொழிற்படுவதற்கு பாராளுமன்ற முறையில் நிறையவே வாய்ப்புக்கள் உண்டு. எனவே பாராளுமன்ற முறையின் மூலம் முழுமையான ஜனநாயகம் வந்துவிடும் எனக் கூற முடியாது. மக்கள் விழிப்புடன் இருந்து அரசியல் செயற்பாடுகளிலும் பங்கு கொள்கின்றபோதே இம்முறையினை சிறந்த ஜனநாயக முறையாக மாற்ற முடியும். இதைவிட பன்மைத்துவ சிந்தனையை அரசியல் நிறுவனங்கள் எல்லாவற்றிலும் கட்டியெழுப்ப வேண்டும்.

**ஆட்சிமாற்றத்திற்குப் பின்னால் நின்று செயற்பட்டவை அமெரிக்கா தலைமையிலான மேற்குலகும் இந்தியாவும்தான். இந்த ஆட்சி மாற்றம் மேற்குலகினதும் இந்தியாவினதும் காலனியாக இலங்கையை மாற்றிவிட்டது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. தயான் - ஜயதிலக போன்ற சிங்கள புலமையாளர்கள் இதனை முன் வைக்கின்றனர். அவர்கள் ஆட்சி மாற்றத்தினை சர்வதேச சதி முயற்சி எனக் கூறுகின்றனர். இது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

பதில் : மகிந்த ராஜபக்ஷவும் இதனைத் தான் கூறுகின்றார். அவருக்கு அவ்வாறு கூறுவதற்கு உரிமையில்லை. அவர் போரை நடத்துவதற்காக மேற்குலகினதும், இந்தியாவினதும் உதவிகளைத் தாராளமாகவே பெற்றிருக்கின்றார். அமெரிக்கா புலிகளின் கப்பல்கள் தொடர்பான துல்லியமான புலனாய்வுத் தகவல்களை வழங்கியிருந்தது. அதுவே புலிகளின் கப்பல்களை மூழ்கடிப்பதற்கு உதவியாக அமைந்தது. இந்தியா நேரடியாகவே ராடர் உதவிகளை வழங்கியதோடு நேரடி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது. இந்த இரு தரப்பினரதும் உதவிகள் கிடைத்திருக்காவிட்டால் போரில் ஒருபோதுமே வெற்றியடைந்திருக்க முடியாது.

அமெரிக்கா தலைமையிலான மேற் குலகத்திற்கும் இந்தியாவிற்கும் இலங்கையில் சீனாவின் அதிகரித்த செல்வாக்கு, அரசின் ஊழல், ஜனநாயகமின்மை என்பவற்றால் ஆட்சிமாற்றம் ஒன்று அவசியமாக இருந்தது. அதற்காக கடுமையாகச் செயற்பட்டு ஆட்சிமாற்றத்தைக் கொண்டு வந்திருக்கின்றன.

இன்று தாம் உருவாக்கிய ஆட்சி மாற்றத்தை பாதுகாப்பதில் முனைந்துள்ளன. அதற்காக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் விசாரணை அறிக்கை வெளிவருவதையும் பிற்போட்டு தமிழ்

# ஒரு ஜனநாயகமும்,
# நக்கு இன்னோர்
# ன்பற்றப்படுகின்றது

## ரியர் சங்கத் தலைவர்
## னுடன் ஒரு நேர்காணல்

நேர்கண்டவர்
சி.அ.யோதிலிங்கம்

மக்களை ஏமாற்றியுள்ளன. இந்தச் சக்திகளின் கட்டுபபாட்டில் இலங்கை தற்போது இருக்கின்றது என்பது உண்மைதான். இது ஒரு காலனி நாட்டிற்குரிய தன்மையைப் பெறுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சர்வதேசசக்திகள்தங்கள்நலன்களிலிருந்துதான் செயற்படும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே! அதேவேளை தென்னிலங்கை சக்திகளுக்கு ஒரு ஜனநாயக சூழல் தேவைப்பட்டது. தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு மகிந்தரின் இனவாத ஆக்கிமிப்பிலிருந்து விடுபட வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது.

இந்த இடத்தில்தான் சர்வதேச சக்திகள், தென்னிலங்கை ஜனநாயக சக்திகள், தமிழ், முஸ்லிம், மலையக மக்கள், "மகிந்தரை அகற்றுதல்" என்கின்ற ஒரு புள்ளியில் இணைந்தனர்.

இனிவரும் காலத்தில் அமெரிக்கா இந்திய ஆக்கமிரமிப்பிலிருந்து இலங்கையைப் பாதுகாக்கும் பொறுப்பும் உள்நாட்டுச் சக்திகளுக்கு உண்டு. இங்கு கொதிநீருக்குள் இருந்து எண்ணெய்ச் சட்டிக்குள் விழுந்ததாக நாம் இருக்கக் கூடாது.

ஆட்சிமாற்றம் தென்னிலங்கை ஜனநாயக சக்திகளினதும், தமிழ், முஸ்லீம் மலையக மக்களினதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவில்லை என்பதை நாம் ஏற்றேயாக வேண்டும்.
நான் மீண்டும் கூறுகின்றேன். இது ஒரு சந்திதான். நாம் தொடர்ந்தும் மேலே செல்ல வேண்டும்.

**மகிந்த ராஜபக்ச மீண்டும் எழுச்சியடைவது போல ஒரு தோற்றம் தெரிகின்றது. அவரது ஆதரவாளர்கள் அதற்காகக் கடுமையாகச் செயற்படுகின்றனர். சீனாவும் தனது நலன்களுக்காக இதனை ஊக்குவிக்கின்றது. மகிந்த ராஜபக்ஷவும் தனது மீள்எழுச்சிக்கேற்ற வகையில் பகிரங்கமாகவே காய்களை நகர்த்தி வருகின்றார். இந்த நிலையில் ஆட்சி மாற்றம் நிலைத்து நிற்கும் என நீங்கள் கருதுகிறீர்களா?**

பதில்: பேரினவாத சக்திகள்தான் மகிந்த ராஜபக்சவினை ஆதரித்து நிற்கின்றன. அவரும் அதற்கேற்ற வகையில் தமது பிரசாரங்களாக பௌத்த விகாரைகளைப் பயன்படுத்துகின்றார். தமது இருப்பிற்கு வேறு தெரிவில்லாத விமல் வீரவன்ச, தினேஸ் குணவர்த்தனா, வாசுதேவ நாணயக்கார போன்றவர்களும் பக்கபலமாக நிற்கின்றனர். சீனாவும் தனது நலன்களிருந்து அதனை ஊக்குவிக்கின்றது. தயான் ஜயதிலக போன்றவர்கள் இச்செயற்பாட்டிற்கு புலமைப் பின்பலம் கொடுக்கின்றனர்.

இன்னோர் பக்கத்தில் மைத்திரிபால சிறிசேனாவின் கட்டுப்பாட்டின் கீழ் சிறீலங்கா சுதந்திரக் கட்சி இல்லை. மைத்திரிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதுதான் ஓரளவு செல்வாக்கு உள்ளது. மகிந்த ராஜபக்ச மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் மீது அதிக செல்வாக்கினைக் கொண்டுள்ளார்கள். சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மைத்திரியின் செல்வாக்கு வளர்கின்றதா? இல்லையா? என்பதும் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் மக்கள் திருப்தியடைகின்றார்களா? இல்லையா என்பதும் பேரினவாத கருத்துக்கள் எடுபடுவதற்கான சூழல் இருக்கின்றதா? இல்லையா? என்பதும்தான் மகிந்தரின் எழுச்சியைத் தீர்மானிக்கும் என நினைக்கின்றேன்.

**19 ஆவது திருத்தத்தில் நாம் நினைத்தது போல மாற்றங்கள் வரவில்லை. இதனால் எதிர் பார்த்த ஜனநாயகம் வரும் எனக் கூற முடியாது. எனவே ஜனநாயகத்திற்கான எமது போராட் டத்தை இதனுடன் நிறுத்தக் கூடாது. 19 வது திருத்தம் ஒரு சந்தி மட்டும்தான். போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். அதனூடாக ஜனாதிபதி முறையினை முழுமையாக இல்லாமல் செய்ய வேண்டும்.**

**ஐக்கிய தேசியக் கட்சி பலவீனமடைந்து வருவது போல ஒரு தோற்றம் தெரிகின்றது. இது உண்மையா? கட்சித்தலைமை கொடுக்கக் கூடிய ஆற்றல் ரணில் விக்கிரமசிங்கவிற்கு இருக்கின்றது என நீங்கள் கருதுகிறீர்களா?**

பதில் : ஐக்கிய தேசியக் கட்சி பலவீனமடைந்து வருகின்றது என்பது உண்மைதான். இன்று அக்கட்சியினை தமிழ், முஸ்லீம், மலையக மக்கள்தான் தாங்கிப் பிடிக்கின்றனர். இதற்கு கொள்கை காரணமல்ல. மகிந்தர் ஆதிக்கத்தினை நீக்க வேண்டும் என்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கின்றனர். சிங்கள மக்களினதும் 30 தொடக்கம் 35 வீதமான வாக்கு வங்கி ஐக்கய தேசியக் கட்சிக்கு இருந்தது. ஆனால் மகிந்தரின் போர் வெற்றியினால் ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மையான வாக்குகள் மகிந்தரை நோக்கி நகர்ந்தன. போர் முடிவடைந்து சில ஆண்டுகளாக சிறிது கூட ஐக்கிய தேசியக் கட்சியினால் எழும்ப முடியவில்லை. நடை பெற்ற தேர்தல்களில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெற்ற வாக்குகளின் அரைவாசி வாக்குகளைக் கூட ஐக்கிய தேசியக் கட்சியினால் பெறமுடியவில்லை.

ஆனால் கடந்த ஊவா மாகாண சபைத் தேர்தலில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. மகிந்தரின் ஆட்சி மீதான வெறுப்பினால் மகிந்தருக்குச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கணிசமான வாக்குகள் பழைய இடத்திற்கு திரும்பின. ஜனாதிபதி தேர்தலிலும் அதனைப் பார்க்க முடிந்தது.

ரணில் விக்கிரம சிங்க ஜனவரி 7 ஆம் திகதி தனக்கு அரசாங்கம் கிடைக்கும் எனக் கடைசி வரை நினைத்திருக்கமாட்டார். ஒரு அதிஸ்ரம் போலவே அவரின் கைகளுக்கு அரசாங்கம் வந்தது. இது ஒரு தற்காலிக செழிப்பே.

ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஒரு சிறப்பம்சம் இருந்தது. அது முதலாளித்துவ கட்சியாக இருந்தாலும் எல்லா இனங்களை யும் மதங்களையும் உள்வாங்கிய பன்மைத்துவப் பண்பு கொண்ட பன்மைத்துவக் கட்சியாக இருந்தது. அண்மைக்காலமாக அதன் பன்மைத்துவப் பண்பு குறைந்து கொண்டே செல்கின்றது. இனவாதப்பண்புகளை அது சுவீகரிக்க முயல்கின்றது.

அது தற்போது ஆட்சியைத் தீர்மானிப்பது இனவாதம்தான். தமது தொடர் தோல்விக்கு காரணம் இனவாதம்தான் என நினைக்கப் பார்க்கின்றது. இதனால்தான் இனவாதத்தை சுவீகரிக்க முயல்கின்றது. ரணில் விக்கிரமசிங்க மிகவும் சிரமப்பட்டு தன்னை ஒரு இனவாதியாகக் காட்ட முனைகின்றார். இந்தப் போக்கு தொடர்ந்தால் தமிழ், முஸ்லிம் மலையக மக்கள் வேறு தெரிவுகளை நாட வேண்டி வரும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னடைவிற்கு புறக்காரணிகள் பல இருந்தாலும் ரணில் விக்கிரமசிங்க தான் பிரதான காரணம். ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றிலேயே மிகவும் பலவீனமான தலைவராக அவரேயிருக்கின்றார். கட்சியின் பின்னடைவிற்கு பொறுப்பேற்று பதவி விலகவும் அவர் தயாராக இல்லை. இதனால் வேறு ஆளுமையுள்ள தலைவர்கள் பொறுப்பேற்பதற்குரிய சூழலும் இல்லாமல் இருக்கின்றது.

வரப் போகும் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுவது கடினமாக இருக்கும் என்றே நினைக்கின்றேன்.

ஜனாதிபதி தேர்தலில் கட்சி வெற்றி பெற்றதனால் கட்சியின் கட்டுப்பாட்டை ரணில் தன் கைகளில் வைத்திருக்கின்றார். பாராளுமன்றத் தேர்தலில் கட்சி தோல்வியடைந்தால் ரணில் கட்டுப்பாட்டை இழக்கக் கூடும்.

# தாயாகப் போகும் உங்களுக்கு

## தேவையானவை....

16

- டாக்டர் எம்.கே.முருகானந்தன்-

பிரசவத்தின் போதும் பின் பாலூட்டும் காலத்திலும் உங்களுக்கும்சிலபொருட்கள்தேவையாகஇருக்கும். அவற்றையும் தயார் செய்து வையுங்கள்.

உதாரணமாகப் பிரசவ நேரத்தின்போது உங்களுக்குச் சில நீளப்பாவாடைகள் அல்லது லுங்கி போன்ற துணிகள் அல்லது நூல் சேலைகள் தேவையாக இருக்கும். அத்துடன் படுக்கைச் சட்டைகள் (Bed Jacket) கட்டாயம் தேவை. சுகாதாரத் துண்டுகள் (Sanitary Pads) கட்டாயம் தேவைப்படும் என்பதால் அதில் ஒரு பெட்டி வாங்கி வையுங்கள்.

பாலூட்டும் காலத்திற்கு ஏற்ற பெரியமார்புக் கச்சைகள் (Brassiere) தேவைப்படும். அத்துடன் பாலூட்டுவதற்கு ஏற்ப முன் பக்கத்தால் திறக்கக் கூடிய சட்டைகளைத் தயார் செய்து வையுங்கள். உங்களுக்கும் சவர்க்காரம், பவுடர், சோப், சீப்பு போன்ற பொருட்களும் தேவைப்படும்.

வைத்தியசாலையில் தங்கிருக்கும் போது உங்கள் உபயோகத்திற்கான காலணிகள் அவசியம். அதையும் மறந்துவிடாதீர்கள்.

நீங்கள் பிரசவத்திற்காக வைத்தியசாலை செல்லும் போது பல பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும். நாங்கள் முன்பு குறித்த பொருட்களை எல்லாம் எடுத்துச் செல்வது அசாத்தியமானதும் அவசியமற்றதுமாகும். மிக அத்தியாவசியமானவற்றை எடுத்துச் செல்லுங்கள். இவற்றைப் பிரசவ வேதனை ஆரம்பித்ததும் எடுத்து ஒழுங்கு பண்ண முடியாது. அத்துடன் பிரசவ வேதனை எந்தத் தினத்தில் தொடங்கும் என்பதும் யாரும் அறியாதது.

எனவே, ஒன்பதாம் மாதம் தொடங்கும் போதே வைத்தியசாலையில் தங்கியிருக்கும் போது உங்களுக்குத் தேவைப்படக் கூடிய எல்லாப் பொருட்களையும் தயாராக்கி ஒரு சூட்கேசில் ஒழுங்காக அடுக்கி வைத்திருங்கள்.

பிரசவ வேதனை ஆரம்பமானதும், முன்னரே தயாராக்கி வைத்திருக்கும் இந்தச் சூட்கேசை எடுத்துச் செல்லலாம். இதனால் அந்த முக்கியமான நேரத்தில் பொருட்களைத் தேடும் கால விரயத்தைத் தவிர்க்கலாம். அத்துடன் அவசரத்தில் தேடும்போது சில பொருட்களை மறந்துவிடக் கூடிய சந்தர்ப்பத்தையும் தவிர்க்கலாம். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களின் மாதிரிப் பட்டியல் ஒன்றை இங்கு தருகிறேன். ஆயினும் உங்களது விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப இதில் வேண்டிய மாறுதல்களைச் செய்து கொள்ளலாம்.

### வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டியவை

**உங்களுக்கு:**

1. பழைய பருத்தி வேட்டி (வெள்ளை) 2
2. சுத்தமான நூல் சேலைகள் 3
3. படுக்கைச் சட்டை (Bed Jacket) 3
4. சுடுதண்ணீர்ப் போத்தல் 1
5. நீரருந்தும் கோப்பை (Drink cup)
6. பெரிய கோப்பை (Jug) 1
7. கரண்டி 1
8. படுக்கை விரிப்பு, போர்வை 1
9. சவர்க்காரம், சீப்பு, பௌடர்
10. நீளமான கவுண் 3
11. சுகாதார துண்டுகள் பக்கற் 2

**குழந்தைக்கு:**

1. சவர்க்காரம்
2. பவுடர்
3. ஓடிக்கோலோன்
4. பழைய துணியில் தைத்த கட்டும் துணிகள் (Napkins) 6
5. துல்லியமான துணியில் தைத்த சட்டைகள் 2
6. கம்பளித் துணியில் தைத்த சட்டைகள்
7. கொதித்தாறிய நீர் பருக்குவதற்கு உகந்த சின்ன டம்ளர் அல்லது நீரருந்தும் கோப்பை
8. சிறிய கரண்டி
9. மென்மையான பருத்தித் துவாய்
10. கம்பளித் துவாய் (Flannal) மழைக்காலத்திற்கு
11. நப்கின்ஸ் குத்தும் பூட்டூசிகள் (Nappy pins)

### குழந்தைக்கான ஆடைகள்

வெய்யில் காலத்தில் குழந்தைகளுக்கு ஆடையே வேண்டியிருக்காது. ஆயினும் சில ஆடைகளாவது தேவைப்படும். இவற்றைத் துல்லியமான பருத்தித் துணியிலேயே தைத்து வையுங்கள். அவற்றையும் சுலபமாக அணியவும் கழற்றவும் கூடிய விதத்தில் திறந்த சட்டைகளாகத் தையுங்கள். அத்துடன் குழந்தை கை, கால் ஆட்டி விளையாடுவதற்கு இடைஞ்சலாக அவை இறுக்கமாக இருக்கக் கூடாது. குளிர் காலத்திற்கு இரண்டு சோடி கம்பளி உடைகள் தேவையாயிருக்கும்.

### தலையணை தேவையில்லை

குழந்தைகளுக்குத் தலையணை தேவையில்லை. தலையணை இல்லாமலே சுகமாகத் தூங்குவார்கள். தலையணை சில தருணங்களில் ஆபத்தானதும் கூட. சிறிய தலையணை குழந்தையில் கைகால் ஆட்டத்தினாலோ அன்றி வேறு ஏதாவது தவறினாலோ குழந்தையின் முகத்தின் மேல் வீழ்ந்து விட்டால், குழந்தை மூச்சுத்திணறி இறந்துவிடக் கூடும். எனவே தலையணையைத் தவிருங்கள்.

### துவாய்

குழந்தையை குளிப்பாட்டிய பின்னும், உடல் கழுவிய பின்னும் துடைப்பதற்கான துவாய் தேவை. இது மிக மிருதுவானதாக இருப்பது அவசியம். இல்லையேல் குழந்தையின் மிருதுவான சரீரத்தை அது நோகச் செய்துவிடும்.

### ஏனைய பொருட்கள்

சோப் (Soap) : காரமான இரசாயனப் பொருட்கள் சேர்க்காத ஏதாவது ஒரு மென் சவர்க்காரம்.

பிரஷ் (Brush) : மென்மையான தும்புகளைக் கொண்ட பிரஷ் குழந்தையின் தலைமுடியை வார உதவும்.

பவுடர் (Powder) : ஏதாவது ஒரு பேபி பவுடர்.

லோஷன் (Baby Lotion) : மிக அவசியமானது அல்ல. ஆயினும் சொர சொரப்பான தோலை உடைய பிள்ளைகளின் சருமத்தை ஈரலிப்பாக்க உதவும்.

பாற்போத்தல், அதற்கான சூப்பிகள் (Nipples) பால்மா போன்றவை பற்றி நான் எதுவுமே சொல்லவில்லை என்று யோசிக்கிறீர்களா?

குழந்தைக்கு உகந்த பால் தாய்ப்பாலே. 'எனக்குப் பால் சுரக்காவிட்டால் என்ன செய்வது' என்று யோசிக்கீர்களா? பால் நிச்சயம் சுரக்கும். உங்கள் குழந்தைக்கு உங்கள் பாலை ஊட்ட வேண்டும் என்ற ஆர்வமும், திட நம்பிக்கையும் இருந்தால் குழந்தைக்குத்தேவையான அளவு பால் நிச்சயம் சுரக்கும். எனவே பால் ஊட்டுவதற்கான போத்தலையும் ஏனைய உபகரணங்களையும் முன்கூட்டியே வாங்கி பாலூட்ட வேண்டும் என்ற உணர்வை நீங்களே மழுங்கடித்து விடாதீர்கள்.



**சிறிய தலையணை குழந்தையில் கைகால் ஆட்டத்தினாலோ அன்றி வேறு எதாவது தவறினாலோ குழந்தையின் முகத்தின் மேல் வீழ்ந்து விட்டால், குழந்தை மூச்சுத்திணறி இறந்துவிடக் கூடும். எனவே, தலையணையைத் தவிருங்கள்.**

# உலகத் தமிழ்த் தேசிய வாதம் கட்டியெழுப்பப்படவேண்டும்

### ஆறாவது சவால்


### தமிழ் மக்கள் ஒருசிறிய தேசிய இனம்

தமிழ் மக்கள் சிறிய தேசிய இனமாவார். ஒரு சிறிய தேசிய இனம் விடுதலைப் போராட்டத்தை நடத்தும்போது இரண்டு விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒன்று தாயகத்தில் அனைத்து பிரிவினரையும் போராட்டத்திற்கு பின்னால் அணி திரட்டுவது. இரண்டாவது தாயகத்திற்கு வெளியில் உலகளாவிய வகையில் ஆதரவு சக்திகளை அணி திரட்டுவது அதற்கேற்ற வகையில் மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் வகுத்துச் செயற்பட வேண்டும். ஆனால் கடந்த காலத்தில் இவை போதியளவு இடம்பெறவில்லை.

தமிழ் மக்கள் எண்ணிக்கையில் குறைந்த தேசிய இனமாக இருக்கின்ற அதேவேளை போரின் பாதிப்பினால் சுமார் 10 லட்சம் வரையிலான மக்கள் வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்தனர். இந்த புலம்பெயர்வு, சர்வதேச மட்டத்தில் தமிழர் விவகாரத்தை பேசுபொருளாக்கவும் போர் நெருக்கடிகளின் போது மக்களுக்கும் போராட்டத்திற்கும் உதவிகளை வழங்கவும் பயன்பட்டது என்பதும் உண்மைதான். ஆனால் தாயக மட்டத்தில் பாரிய பல வீனத்தை உருவாக்கியது. அங்கும் கூட இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள், புலிகளின் பிரதேசங்கள் என இரு பிரதேசங்கள் உருவாக்கப்பட்மையினால் போரின் சுமைகளை புலிகளின் பிரதேசங்களிலிருந்த மக்கள் மட்டும் தனித்துச் சுமக்க வேண்டியேற்பட்டது.

இந்நிலையில் சிறிய தேசிய இனம் எப்போதும் ஐக்கியத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். மக்களின் சமூக அமைப்பு காரணமாக பல்வேறு அரசியல் இயக்கங்கள் தோற்றம் பெறலாம். அது தவிர்க்க முடியாது. ஆனால், அனைத்து மக்களும் தமிழ்ச் சமூகத்திற்கு வெளியே இருந்து வரும் தேசிய இன ஒடுக்குமுறை காரணமாக பாதிக்கப்படுவதால் அனைவரும் இணைந்து போராட வேண்டியது கட்டாயமானது. வலுவான ஐக்கிய முன்னணி ஒன்றினால்தான் இதனைச் சாத்தியமாக்க முடியும்.

வியட்நாமில் தலைவர் ஹோசிமின் இவ்வாறான வெற்றிகரமான ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்பி அமெரிக்காவுக்கு எதிராகப் போராடினார். சீனாவில் ஜப்பானிய ஆதிக்கத்திற்கெதிராக வலுவான ஐக்கிய முன்னணி கட்டியெழுப்பபட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தமிழ்த் தேசியப் போராட்டத்திலும் 1985 ஆம் ஆண்டு திம்பு பேச்சுவார்த்தையின்போது ஈழத் தேசிய விடுதலை முன்னணி என்ற பெயரில் ஐக்கிய முன்னணி ஒன்று அமைக்கப்பட்டது. ஆனாலும் இந்திய உளவுப் பிரிவின் ஊடுருவல்களினால் அந்த ஐக்கிய முன்னணி வளர முடியவில்லை.




ஐக்கிய முன்னணி கொள்கை அடிப்படையிலான ஐக்கிய முன்னணியாக இருக்க வேண்டும். அதற்கு தெளிவான இலக்கு, வலுவான கொள்கைகள், பயன்மிக்க வேலைத்திட்டங்கள் இருக்க வேண்டும். இவையில்லாத ஐக்கிய முன்னணியினால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கொள்கை ரீதியான ஐக்கிய முன்னணியல்ல. அது ஒரு தேர்தல் கூட்டணி. அங்கு கொள்கை பற்றிய விவாதங்கள் எதுவும் நடைபெறுவதில்லை. கதிரை பற்றிய சண்டைகளே இடம்பெறுகின்றன.

தற்போதைய நிலையில் இலக்கு என்பது தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமைதான் - அதில் எந்தவித விட்டுக் கொடுப்புகளுக்கும் இடமில்லை. அந்த சுயநிர்ணய உரிமையை அடைவதற்கான வழிகாட்டிகளாகக் கொள்கைகள் இருக்க வேண்டும். வேலைத் திட்டங்களும் அதற்கேற்ற வகையில் இருக்க வேண்டும்.

இன்றைய சூழலில் ஐக்கிய முன்னணியை அமைக்கும்போது இரண்டு நெருக்கடிகள் ஏற்படலாம். ஒன்று அமைப்புப் பொறிமுறை. இரண்டாவது வெளித்தரப்பின் ஊடுருவல்கள். தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றிலேயே வெற்றிகரமான அமைப்புத் துறையை உருவாக்க முடியவில்லை. குறை முதலாளித்துவ வளர்ச்சியும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஜனநாயக ரீதியான அமைப்பு வடிவம், அதில் இணைந்துள்ள அரசியல் இயக்கங்களுக்கான சமத்துவமும் அந்தஸ்தும், உட்கட்சிப் போராட்டங்களுக்கான வழிமுறைகள்என்பன அவசியம். தனித்தனியான அரசியல் இயக்கங்களிலேயே இவற்றை உருவாக்க முடியாத இன்றைய நிலையில் ஐக்கிய முன்னணிக்குள் இவற்றை எவ்வாறு உருவாக்கலாம் என்ற கேள்விகள் எழலாம். ஆனாலும் வரலாறு ஒரு ஐக்கிய முன்னணியை எதிர்பார்க்கின்றது என்பதை நாம் நிராகரிக்க முடியாது.

வெளித் தரப்பின் ஊடுருவலைப் பொறுத்தவரை எல்லாத் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்திற்குள்ளும் அது இடம் பெறுகின்ற ஒன்றுதான். அதுவும் வல்லரசுகளுக்கிடையிலான புவிசார் அரசியல் போட்டி நிகழும் பிரதேசங்களில் இது அதிகமாக இருக்கும். அவை விடுதலை இயக்கங்களுக்குள் ஊடுருவி அவற்றின் ஐக்கியத்தை சிதைக்கப் பார்க்கும். சில விடுதலை இயக்கங்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கி தனது நலன்களுக்காக பயன்படுத்த முயற்சிக்கும். செயற்படுகின்ற விடுதலை இயக்கங்கள் ஒத்துழைக்காத போது புதிதாக விடுதலை இயக்கங்களை உருவாக்கி செயற்கையாக பெருக்க வைத்துத் தனது நலன்களுக்குப் பயன்படுத்த முயற்சிக்கும். எமது விடுதலைப் போராட்டத்தில் இது நிறையவே நடந்தது. இந்தியா தனது நலன்களுக்காக விடுதலைப் போராட்டத்தைப் பயன்படுத்த முனைந்தது. புலிகள் தனது கட்டுப்பாட்டின் கீழ் வரவில்லை என்பதற்காக அதனை அழிக்க முனைந்தது.



மாமனிதர் சிவனேசன் ஞாபகார்த்த நினைவுப் பேருரை

10

தற்போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தனது நலன்களுக்காகவே பயன்படுத்துகின்றது. தன்னுடைய நிகழ்ச்சி நிரலையே கூட்டமைப்புக்கூடாக நகர்த்த முயற்சிக்கின்றது. தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்கின்ற தமிழ்த் தேசியத்தின் அடிப்படைகளை கைவிடுமாறு பணிக்கின்றது.

> **“இந்நிலையில் சிறிய தேசிய இனம் எப்போதும் ஐக்கியத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். மக்களின் சமூக அமைப்பு காரணமாக பல்வேறு அரசியல் இயக்கங்கள் தோற்றம் பெறலாம். அது தவிர்க்க முடியாது. ஆனால் அனைத்து மக்களும் தமிழ்ச் சமூகத்திற்கு வெளியே இருந்து வரும் தேசிய இன ஒடுக்குமுறை காரணமாக பாதிக்கப்படுவதால் அனைவரும் இணைந்து போராட வேண்டியது கட்டாயமானது. வலுவான ஐக்கிய முன்னணி ஒன்றினால்தான் இதனைச் சாத்தியமாக்க முடியும்.”**

● சி.அ.யோதிலிங்கம்

இந்த இரண்டு நெருக்கடிகளிலிருந்தும் விடுபடுவதற்கான மார்க்கங்களை தமிழ்த் தேசிய சக்திகள் கண்டாக வேண்டும். வலுவான விவாதங்களும் உரையாடல்களும் இடம்பெற்று, மக்களும் விழிப்புணர்வுடன் பங்கேற்றால் நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கானன வெளி தெரியத் தொடங்கும்.

அடுத்த விடயம் தாயகத்திற்கு வெளியே ஆதரவுச் சக்திகளை அணிதிரட்டுவது. இந்த விடயத்தில் சேமிப்புச் சக்திகளையும் நட்புக் சக்திகளையும் முதலில் அடையாளம் காண வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை மலையக மக்களும், தமிழக மக்களும் உலகெங்கும் வாழும் தமிழக வம்சாவழி தமிழ் மக்களும் சிறந்த சேமிப்புச் சக்திகளாவர். முஸ்லிம் மக்கள், சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகள், உலகெங்கும் வாழும் முற்போக்கு ஜனநாயக சக்திகள் நல்ல நட்புச் சக்திகளாவர்.

தமிழ்த் தேசிய அரசியலின் ஒரு பகுதிப் பணிகள் இவர்கள் மத்தியிலும் இடம்பெற வேண்டும். இது ஒரு வழிபாதையாக ஒரு போதும் இருக்கக் கூடாது. ஒரு வழிபாதை என்பது மற்றைய தரப்பினை தனது நலன்களுக்கு பயன்படுத்துவதாகத் தான் முடியும்.இந்தப் பாதை இரு வழிப் பாதையாக இருக்க வேண்டும். நாம் அவர்களின் நலன்களில் அக்கறை கொள்வதாகவும் அவர்கள் எமது நலன்களில் அக்கறைகொள்வதாகவும் இருக்க வேண்டும். மலையக மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் தமிழ்த் தேசிய சக்திகள் தங்கள் நலன்களில் அக்கறை கொள்வதில்லை என்ற கவலை உண்டு. இச்சூழல் மாற வேண்டும்.

தாயக மக்கள், மலையக மக்கள், தமிழக மக்கள், உலகெங்கும் வாழும் தமிழக வம்சாவழி தமிழ் மக்கள் என்போர் மத்தியில் உலகத் தமிழ்த் தேசிய வாதம் ஒன்றைக் கட்டியெழுப்புவது பற்றியும் யோசிக்க வேண்டும். இது பரஸ்பர நலன்களைப் பேணுவதற்கு உதவியாக அமைவதோடு உலகத் தமிழர்களை ஒரு குடையின் கீழ் அணிதிரட்டுவதற்கும் உதவியாக அமையும்.



# மலையக தேசியம்

## சிதைக்கப்படும் தமிழ் மொழி

– வோல்டர் டெரி

பதுளை மாவட்டத்தின் பசறை - லுணகலை பிரதேச செயலகங்களின் தமிழ் பகுதிகள் அப்புத்தளை- ஹல்துமுல்லை பிரதேச செயலகங்களின் தமிழ் பகுதிகள், ஹாலிஎல - எல்ல பிரதேச செயலகங்களின் தமிழ்ப் பகுதிகள் இணைக்கப்பட்டு மூன்று தமிழ்ப் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் கண்டி மாவட்டத்தின் பன்விலை பிரதேச செயலகம் தமிழ் செயலகமாக மாற்றப்பட வேண்டும். மேலும், பஸ்பாகே கோரளை (நாவலப்பிட்டி) மற்றும் தொலுவ (உடபளாத்) பிரதேச செயலகங்களின் தமிழ் பகுதிகள் இணைக்கப்பட்டு தனி தமிழ் பிரதேச செயலகம் உருவாக்கப்பட வேண்டும். மலையக மக்கள் செறிவு குறைவாக வாழும் பகுதிகளில் பிரதேச செயலகங்களில் தமிழ் பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும். மலையகத் தமிழர்கள் செறிவாக வாழ்கின்ற இடங்களில் மாவட்ட நீதிமன்றங்களையும், நீதவான் நீதிமன்றங்களையும் உருவாக்க வேண்டும். கல்வி நிர்வாகம், பொது நிர்வாகம், நீதி நிர்வாகம் என்பவற்றில் நிர்வாகம் தமிழில் நடப்பதோடு ஊழியர்களும் தமிழர்களாக இருத்தல் வேண்டும்.

மொழியைவளர்ப்பதில் பல்கலைக் கழகத்தின் பங்கு அளப்பரியது. மொழி பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகளைப் பல்கலைக் கழகங்களே மேற்கொள்ள முடியும். மொழியுடன் தொடர்புடைய பண்பாட்டு விடயங்களிலும் பல்கலைக்கழகங்கள் அக்கறை செலுத்த முடியும். எனவே, மலையகத்தில் தமிழ் மொழியை நிலை நிறுத்துவதற்கும் அது அழிந்து விடாமல் பாதுகாப்பதற்கும் மலையகத்திற்கென தமிழ் மொழி மூலமாக பல்கலைக்கழகம் அவசியமானதாகும்.

மேற்கூறிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சாத்தியப்படுத்துவதற்காக பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம். முதலில் தமிழ் மொழியின் முக்கியத்துவத்தை மலையக மக்கள் மத்தியில் பேசு பொருளாக்க வேண்டும். விழிப்புணர்வு நிகழ்வுகளை மலையகம் எங்கும் நடத்த வேண்டும். மேலும், மொழி என்ற வகையில் தமிழ் மயப்படுத்தலுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும். அது பயனளிக்காத பட்சத்தில் சிறிய அளவிலான அழுத்தத்தைக் கொடுத்தல் வேண்டும். இதுவும் பயன் தராதவிடத்து போராட்டங்களை முன்னெடுத்தல் வேண்டும்.



நிலம், பொருளாதாரம், கலாசாரத் திற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்கும் கொடுக்க வேண்டும். ஏனெனில் தமிழ் மொழி மலையகத் தேசியத்தின் பிரதான தூண்களில் ஒன்றாகும். மலையக மக்களை உணர்வு ரீதியாக ஒன்றிணைக்கும் கருவியாகவும் தமிழ் மொழியே உள்ளது.

"தமிழ் மொழிக்காக யாரும் உயிர் கொடுக்கத் தேவை இல்லை.
தமிழ் மொழிக்கு உயிர் கொடுத்தால் போதும், மலையகத் தேசியம் நிலைத்திருக்கும்."


(முற்றும்)

## மலைத்தாயின் பாசம் மீரியபெத்தையில்...

௪

மலைத் தாயே...!
அடிவயிற்றில் அரவணைத்து
இடித்துச் சொன்னாயோ...?
உழைப்பிற்கு ஊதியமில்லாத மண்ணில்
வியர்வைக்கு விலையில்லா மண்ணில்
வீடிருந்தும் வாழ்வில்லா மண்ணில்
வாழ்ந்தும் வாழ்வில்லா மண்ணில்
அடிவயிற்றில் அரவணைத்து
இடித்துச் சொன்னாயோ....?
இது எம் மக்களின் மண்ணென்று
இது எம் மக்களின் தேசமென்று
தொழிலுரிமை இல்லா மண்ணில்
பிறப்புரிமை இல்லா மண்ணில்
வாழ்விற்கு வழியில்லா மண்ணில்
அடிவயிற்றில் அரவணைத்து
இடித்துச் சொன்னாயோ...?
இது எம் மக்களின் மண்ணென்று
இது எம் மக்களின் தேசமென்று
இனவாத நில ஆக்கிரமிப்பு
மதவாத நில ஆக்கிரமிப்பு
வர்க்க வாத ஆதிக்க ஆக்கிரமிப்பு
அடக்குமுறை வீரிய ஆக்கிரமிப்பு
அவலமாய் நடக்கையிலே
அடிவயிற்றில் அரவணைத்து
இடித்துச் சொன்னாயோ...?
இது எம் மக்களின் மண்ணென்று
இது எம் மக்களின் தேசமென்று

– மலைத்தம்பி



# டிராஃபிக் சிக்னல்

உலகத் தரம் வாய்ந்த சினிமா

## நடைபாதைவாசிகளின் வாழ்க்கை

- ஜெ. பிஸ்மி

இன்றைய அவசர உலகத்தில் நாமெல்லாம் நடமாடும் இயந்திரங்கள். நம்மைச் சுற்றி எத்தனையோ நிகழ்வுகள் பார்வைக்கு எதிரில் பல கதைகளை சுமந்த எத்தனையோ முகங்கள். எதையும், யாரையும் கவனிக்க நேரமில்லை நமக்கு. எந்நேரமும் எதற்காவோ விரைந்து கொண்டிருக்கிறோம். டிராஃபிக் சிக்னலில் காத்திருக்காத மனிதர்கள் உண்டா? அங்கே காத்திருக்கும் கணங்களில் தினம் தினம் காணக்கிடைக்கின்ற காட்சிகளை நினைவில் சேகரிக்கிறோமா? டிராஃபிக் சிக்னலில் வாகனத்தை உறுமலிட்டுக் கொண்டு பச்சை விளக்குக்காக டென்ஷனுடன் காத்திருக்கும் அந்த இடைவெளியில் நம்மை நோக்கி நீளும் கைகள்தான் எத்தனை? பிச்சைஎடுப்பவர்கள், அரவாணிகள், பாலியல் தொழில் செய்கிற பெண்கள்? பூ விற்பவர்கள், புத்தகம் விற்பவர்கள், பொம்மை விற்பவர்கள், கார் துடைக்கிற பொருட்கள் விற்பவர்கள் என எத்தனை மனிதர்கள்? கொளுத்தும் வெயில்? கொட்டும் மழை, மூச்சுத் திணற வைக்கும் வாகனங்களின் புகை - எதைப் பற்றியும் கவலைப்படாமல், சிக்னலுக்காகக் காத்திருக்கும்வாகனங்களின்நெரிசல்களுக்கிடையில் தேர்ந்த சர்க்கஸ்காரனைப் போன்ற லாவகத்துடன் நுழைந்து வரும் இவர்கள் ஒவ்வொருவருக்குப் பின்னால்தான் எத்தனை கதைகள்?

மதூர் பண்டர்களின் 'டிராஃபிக் சிக்னல்' என்ற ஹிந்திப்படம் இந்த மனிதர்களைப் பற்றி இவர்களின் வாழ்க்கையைப் பற்றி பேசுகிறது. சாந்தினிபார்? பேஜ் 3படங்களின் மூலம் இந்திய அளவில் குறிப்பிடத்தக்க இயக்குநராக அடையாளம் காணப்பட்டிருக்கும் மதூர் பண்டர்கர் இயக்கிய டிராஃபிக் சிக்னல் திரைப்படம் வெளியானபோது ஹிந்தித் திரையுலகில் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது. மீராநாயரின் 'சலாம் பாம்மே' படத்துக்குப் பிறகு, மும்பை நடைபாதை வாசிகளின் வாழ்க்கையை யதார்த்த மீறல் இல்லாமல் பதிவு செய்த படம் என்ற பாராட்டும் இந்தப் படத்துக்குக் கிடைத்தது.

டிராஃபிக் சிக்னல் - படத்தின் தலைப்பு மட்டுமல்ல, அதுவேதான் கதைக் களமும். மும்பை முனிசிபல் கார்ப்பரேஷனால் இடித்து தரைமட்டமாக்கப்படுகிறது. அதனால் வசிப்பிடம் இழந்து நடுத் தெருவுக்கு வந்த குடும்பங்களில் ஒன்று சில்சிலாவின் குடும்பமும். சில்சிலா பத்து நாட்களுக்கு முன் பிறந்த கைக்குழந்தை, வீட்டை இழந்து, வாழ்க்கையை இழந்து, எதிர்காலம் இருண்ட நிலையில், பசிக் கொடுமை தாங்காமல் பத்து நாள் குழந்தையான சில்சிலாவுடன் மும்பை கேல்கர் மார்க் சிக்னலில் பிச்சை எடுக்க வருகிறாள் சில்சிலாவின் அம்மா.

அந்தப் பிஞ்சுக் குழந்தை சில்சிலா? பார்ப்பவர்களிடம் இரக்கத்தை உண்டாக்கி, தன் அம்மாவுக்குக் கை நிறைய பணத்தை சம்பாதித்துக் கொடுக்கிறது. வயிற்றுப் பிழைப்புக்கு அதுவே நல்ல வழி என்று முடிவெடுக்கிறாள் அந்தத் தாய். டிராஃபிக் சிக்னலில் கையேந்துவதே வாழ்க்கையாகிறது. சில்சிலாவின் அம்மா ஒருநாள் இறந்துபோக, அவனை அரவணைத்து ஆதரிக்கிறாள் அதே பகுதியைச் சேர்ந்த மவ்சி என்ற வயதான பெண்மணி.

ஒவ்வொரு சிக்னலுக்கும் ஒரு குட்டித்தலைவன் (மேனேஜர்) இருக்கிறான்.

> ஒவ்வொரு சிக்னலுக்கும் ஒரு குட்டித் தலைவன் (மனேஜர்) இருக்கிறான். சிக்னலில் பிச்சை எடுப்பவர்களின் வருமானத்தில் ஒரு பகுதியை அவனுக்குக் கொடுக்க வேண்டும் என்பது எழுதப் படாத விதி. சில்சிலா வளர்ந்து வாலிபனானதும் அந்தப் பதவிக்கு வருகிறான். அவனைப் பொறுத்தவரை சிக்னல்தான் அவனுக்குப் பணியிடம் வாழ்விடம் எல்லாமே.

சிக்னலில் பிச்சை எடுப்பவர்களின் வருமானத்தில்ஒருபகுதியைஅவனுக்குக்கொடுக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதி. சில்சிலா வளர்ந்து வாலிபனானதும் அந்தப் பதவிக்கு வருகிறான். அவனைப் பொறுத்தவரை சிக்னல்தான் அவனுக்குப் பணியிடம் வாழ்விடம் எல்லாமே. அவ்வப்போது அடாவடித்தனங்களில் ஈடுபட்டாலும் அடிப்படையில் இளகியவன். தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களைத் தன் குடும்பத்தினராக பாவிக்கிறான். சிக்னலை நம்பி வாழ்கிற எல்லோரையும் நேசிக்கிறான்.

ஜாஃபர் - சில்சிலாவின் தலைவன், அந்த பகுதியில் உள்ள பல சிக்னல்களில் பிச்சை எடுப்பவர்களுக்கு அவனே ஆசான். சில்சிலா போன்ற குட்டித் தலைவர்கள் வசூலிக்கும் பணத்தில் இவனுக்கும் பங்கு உண்டு. இவனுக்குக் கிடைக்கும் பங்கில் ஒரு பகுதி மாஃபியா கும்பலுக்குக் கொடுத்தாக வேண்டும். மாஃபியா கும்பலின் தலைவனுக்கு மாமூல் கொடுக்க ஜாஃபர் செல்லும்போது கூடவே சில்சிலாவும் போகிறான்.

அந்த மாஃபியா கும்பலின் தலைவன் செய்யும் நாச வேலைகளுக்குத் தானும், தன்னைச் சார்ந்தவர்களும் கஷ்டப்பட்டு உழைத்துக் கொடுக்கும் பணம் பயன்படுகிறது என்பதைப் புரிந்து கொள்கிறான் சில்சிலா. ஆனாலும் அதிலிருந்து அவனால் மீள முடியவில்லை. வாழ்க்கையில் யார் மனதையும் புண்படுத்திப் பழக்கமில்லாத சில்சிலா, இந்தப் பிரச்சினையிலிருந்து எப்படி மீள்கிறான்? தன்னையும், தன்னைச் சார்ந்த டிராஃபிக் சிக்னலில் பிச்சை எடுப்பவர்களையும் எப்படி மீட்கிறான் என்பதைச் சொல்கிறது 'டிராபிக் சிக்னல்' படத்தின் முடிவு.


அழுத்தமான மனசை வலிக்க செய்யும் கதை. எனினும் ஆர்ட் பிலிம் என்கிற சாயல் தென்பட்டுவிடக் கூடாது என்ற கவனத்துடன் கலகலப்பான திரைக்கதை உத்தியைக் கையாண்டிருக்கிறார் மதூர் பண்டர்கர். அவரின் இந்த உத்தி கலைப்படத்துக்கும்வணிகப்படத்துக்குமான இடைவெளி சுருக்கி இருக்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.


பளிச்சென ஆடை அணிந்து கொண்டு சிக்னலுக்கு வரும் ஒருவன், தன் டிப்டாப் உடைகளைக் களைந்துவிட்டு, அழுக்கான வெறும் கால்சட்டையுடன், உடலெங்கும் கிரீஸைத் தடவித் தன்னை அழுக்காக்கிக் கொண்டு சிக்னலில் பிச்சை எடுக்கிறான். இப்படிப் பிச்சை எடுக்கும் அவன்? போதிய அளவு பணம் கிடைத்ததும் தன் காதலியை பணக்காரர்கள் உலவும் மல்ட்டிபிளக்ஸ் திரையரங்கத்துக்கு அழைத்துச் செல்கிறான். அங்கே தினமும் அவனுக்குப் பிச்சைபோடும் ஆள் அவனை அடையாளம் கண்டுகொள்ள, தன்னை மறைத்துக் கொள்வதற்காக அவன் படும்பாடு, இயல்பான நகைச்சுவை.

மனித வாழ்க்கையில் காதல் தவிர்க்க முடிவதில்லை. டிராஃபிக் சிக்னலில் வாழும் இவர்களுக்குள்ளும் காதல் உண்டு. குஜராத்திலிருந்து மும்பைக்கு வரும் ராணிக்கு துணிவியாபாரத்தில் சம்பாதித்துத் தன் சொந்த ஊரில் நல்லபடியாய் வாழ்வது குறிக்கோள். சிக்னலில் துணி வியாபாரம் செய்யும் அவளிடம் சில்சிலா மாமுல் கேட்க, உரசலில் தொடங்கும் இவர்களின் உறவு காதலாய் மலர்கிறது பின்னாட்களில்...

டிராஃபிக் சிக்னலில் காத்திருக்கும் வாகனங்களைப் போலவே டிராஃபிக் சிக்னல் படத்திலும் ஏகப்பட்ட விதம்விதமான கதாபாத்திரங்கள். அறுபது கதாபாத்திரங்களை வைத்துக் கொண்டு, அத்தனை பாத்திரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பது இயக்குநரின் திரைக்கதை சாதுர்யம்.

டாம்னிக் என்றொரு இளைஞன் போதைக்கு அடிமையானவன். தன்னை சாஃப்ட்வேர் என்ஜினியர் என்று சொல்லிக் கொண்டு இண்டர்வ்யூவுக்குச் செல்லும்போது பர்ஸை தொலைத்துவிட்டதாகச் சொல்லி டிராஃபிக் சிக்னலில் ஏமாற்றிப் பிழைப்பவன். அவனுக்கு ரோட்டோர விலைமாது ஒருத்தியுடன் காதல். வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி மும்பைக்கு அழைத்து வந்தவனால் விபசாரத்தில் தள்ளப்பட்டவள் இவள். பிச்சை எடுப்பதற்காக தங்களின் கை கால்களை நிஜமாகவே ஊனமாக்கிக் கொள்பவர்கள். இப்படி ஒவ்வொரு கதாபாத்திரங்களும்படம்பார்த்தபிறகும்நம்நினைவுகளிலிருந்து அகலாதிருக்கின்றன.






# விழிகளுக்காய் ஏங்கும் கண்ணீர்

கருமணி

கரிய புகையைக் கக்கியவாறு பேரூந்து புறப்படுகின்றது. வீதியோரங்களில் நின்ற தென்னை மரங்களும், உயர்ந்த பனைகளும் அதனிடையே தெரிகின்ற சிறு குடிசைகளும் அந்தக் கிராமத் தின் சின்னங்களாய்க் காட்சியளித்துக் கொண்டிரக்கின்றன. பச்சைப் பசலேனப் பரந்த வயல்வெளி, கழுத்து முட்டும் நீருக் குள் நின்று தலையை அசைக்கும் பயிர் கள், அந்த வயல்வெளியைத் தடவிச் செல் லும் மெல்லிய காற்று, வரம்புகளில் இருந்து கூட்டம் கூட்டமாய்ப் பறக்கும் வெள்ளைக் கொக்குகள். அத்தனை காட்சிகளை யும் இரசித்தவாறு பேருந்து ஊர்ந்து கொண்டிருக்கின்றது.

நிரோவை, அத்தனை காட்சி களும் கொள்ளை கொண்டிருக்க வேண் டும் அவளின் மௌனம் அதனை வெளிக் காட்டியது. அவளின் மழலைப் பேச்சு, புதுமையைக்கண்டு துள்ளும் மனம், 'குழப்படி' எனச் செல்லமாகச் சூடப்பட்ட பெயர் அனைத்தையும் மறந்து அமைதி யாக இருந்தாள்.

நிரோவின் ஆறுவயது வாழ்க்கை யில் இதுதான் நீண்டதூரப் பயணம்.

மாடிவீடுகள் கூட அவளுக்குப் விசித்திரமான காட்சியாகவே இருந்தது. அவள் வீதியின் இருமருங்கையும் பார்க்க முடியாமல் சிமரப்பட்டிருக்க வேண்டும். தாயிடம் கேட்ட கேள்வி அதனை வெளிக்காட்டியது.

"அம்மா வரக்கேயும் இதாலதானே வருவம்"

"நிரோக்குட்டி, ஏனடா அதைப் பற்றி யோசிக்கிறாய்"

"இல்லம்மா, நாங்க வரக்கே அங்காலப் பக்கத்தில இருந்து வரும் அப்பதானம்மா, அங்காலையும் பாத்துக் கொண்டு வரலாம். அங்காலையும் இப்படிப் பெரிய வீடெல்லாம் இருக்கும்"

எனச்சொல்லிக்கொண்டு தாயின் பதிலை எதிர்பார்க்காதவளாய் பார்வை யைச் சாலையோரங்களை நோக்கிப் படரவிட்டாள்.

"ஏன்டா நிரோக்குட்டி! வரக்கே இந்த இடத்திலேயே இருந்தா அங்காலப் பக்கத்தையும் பாத்துக்கொண்டு வரலாம்தானே"

இந்தப் பதில் அவளைச் சிந்திக் கச் செய்திருக்கவேண்டும். நிரோ சில நொடிகள் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்ணிமைக் காமல் பார்தால் எதையோ யோசிக்கிறாள் என்று அர்த்தம்.

பேருந்து தனது சுமையை மேலும் அதிகரித்துக்கொண்டு, திருமலை என்ற பெயர்ப்பலகையைக் கடந்து கொண்டிருந்தது. கிழக்கில் இருந்து சூரியன் வீசிய ஒளிக்கற்ளைகள் பேருந்துக் கண்ணாடியில் பட்டுத் தெறித்தன.

"வவுனியாக்குப்போக இன்னும் ஒரு மணித்தியாலமாவது எடுக்கும்" என உதடுகள் உச்சரிக்க, கமலம் சீற்றில் சாய்ந்து கொள்கிறாள். அவளின் ஒப்பு தலின்றி இமைகள் மூடுகின்றன. தர்மனின் 18 வயதுத் தோற்றம் அவளின் மனக்கண் ணில் படமாய் விரிகின்றது. அவனின் நிமிர்ந்த நடை ஒளிவீசும் வட்ட விழிகள், பிறர் துன்பப்படுவதைத் தாங்கிக் கொள்ள முடியாத மென்மையான மனம், "வெள்ளையா" என நண்பர்கள் அழைக்கும் போது பல்லுத்தெரியாமல் மலரும் அவனது புன்சரிப்பு, அமைதியான பேச்சு, 'நல்ல நண்பர்களே சிறந்த புத்தகம்' என அவன் அடிக்கடி கூறும் மந்திரம், தற்காலிகத்துக்கு இடம் அளிக்காத சுபாவம் என்பன அவனிடமிருந்து கற்றுக்கொள்ளத் தோன்றும் நற்பண்புகள் எண்ணவைச்சு நான் தலைசீவி விடுவதிலையே திருப்திப்படும் குழந்தை மனம்.

> **"அம்மா என்னைப் பார்க்க வராதீர்கள் நான் நலமாகத்தான் இருக்கிறேன் உங்களைப் பார்க்கப் பிடிக்கவிலையென்று நினைத்துவிடாதீர் கள். நீங்கள் என்னைப்பார்க்க எவ்வளவு ஆவலாக இருக்கிறீர்களோ, அதேபோல தான் நானும். இருந்தாலும் வரும்போது எவ்வளவு துன்பப்படுவீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் எப்போதும் கவலைப்படாமல் இருப்பதையே விரும்பு கிறேன். நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் உங்கள் முகங்களையே பார்க்கின்றேன்"**

"இந்த வயசிலேலயும் அம்மாவோ எண்ணை வைச்சு தலை இழுக்கவேணும்" அப்பாவின் குரல்...

"அம்மா! நீங்கள் அப்படி நினைக்கேலத்தானே" அவனுடைய எதிர் வாதம் மீண்டும் அப்பாவைக் கதைக்க விடாமல் தடுத்துவிடும்.

"தர்மனின் குண நடையெல்லாம் கமலத்தைப் போலத்தான்" எனப்பலர் செல்லலக்கேட்டு நானே எனக்குள் பெருமைப்படுவேனே....

இப்ப என்ர பிள்ளை என்ன செய்வானோ?

கடிதத்தில் கூட...

"அம்மா என்னைப் பார்க்க வராதீர்கள் நான் நலமாகத்தான் இருக்கிறேன் உங்களைப் பார்க்கப் பிடிக்கவிலையென்று நினைத்துவிடாதீர் கள். நீங்கள் என்னைப்பார்க்க எவ்வளவு ஆவலாக இருக்கிறீர்களோ, அதேபோல தான் நானும். இருந்தாலும் வரும்போது எவ்வளவு துன்பப்படுவீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் எப்போதும் கவலைப்படாமல் இருப்பதையே விரும்பு கிறேன். நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் உங்கள் முகங்களையெ பார்க்கின்றேன்".

இப்படி ஒரு வருடத்திற்கு முன் ஒரு கடிதம். கமலத்தின் விழிகள் கண்ணீரில் தத்தளித்தன. சேலைத் தலைப்பால் ஒற்றிக்கொண்டவள் பேருந்து நிற்பதை உணர்ந்து தலையை நிமிர்த்துகிறாள்.

"இம்.. வவுனியா வந்து விட்டது" எனப் பெருமூச்சுடன் கலந்த வார்த்தை.

கமலம் நிரோவின் கையைப் பற்றிக்கொண்டு நிதானமாக இறங்கி வீதியோரத்தில் நடந்துகொண்டிருக்கிறாள். நிரோ தாயின் அன்புப்பிடியில் சிக்கியிருந் தாலும் அவளது விழிகளுக்குள்ளும் வவுனியா 'ரவுண்' சுழன்று கொண்டி ருந்தது. இடைவிடாத வாகன ஓட்டங்களும் சனக்கூட்டங்களும் கடைகளின் அலங் கரிப்புகளும் பிஞ்சு விழிகளுக்குப் பெரும் விருந்தாகவே இருந்தன்.

"நிரோக்குட்டிக்குப் பசிக்குதோ"

"ஓம்.. அம்மா.."

"நிரோக்குட்டிக்கு என்ன சாப்பாடு வேண்டித்தாறது"

"கேக்"

"கேக்க விட்டா வேற சாப்பாடே கிடையாது நிரோக்குட்டிக்கு" சொல்லிக் கொண்டே கடைக்குள் நுழைந்தாள் கமலம்.

"அம்மா! அண்ணாவுக்கும் வாங்கி வைக்க மறந்திடாதீங்கோ?"

"அம்மா போட்டோவும் கவனம்'

நிரோவின் பேச்சுக் காதில் எட்ட வில்லை. கமலம் தர்மனுக்கு வேண்டிய பொருட்கள் எல்லாம் வாங்கித் தோள்பை யுள் திணித்துக்கொண்டிருந்தாள்.

"நிரோ! போவோமே?"

இருவரும் புதுக்குடியிருப்புப் புறப்பட இருந்த பெருந்தில் ஏறி அமர்ந் தார்கள். இவர்களுக்காவே காத்துக் கொண்டிருந்தது போல பேருந்து புறப்படு கின்றது.

(தொடரும்)

# தண்ணீர் போத்தல்



இந்தப் போத்தல்
முழுவதும் தண்ணீர் இருந்தது
இந்தத் தண்ணீரில் எங்கள் பயணத்தை
தொடர்ந்திருக்கலாம்
கொஞ்சம் தண்ணீரைக் கொட்டிவிட்டு
புதிதாக தண்ணீர் தேட புறப்பட்டோம்
இருந்த தண்ணீரும் ஆவியானது
கசிந்தது தண்ணீர் வருமென்ற
சிந்திக்காமல் மீதமிருந்த தண்ணீரையும்
கொட்டிவிட்டோம்
போத்தல் காலி போத்தலானது
இப்போ போத்தலில்
மதுபானம் நிறைகிறது
அன்று கல்லு போதை என்று சொன்னர்
குளிர்பானம் நிறைகிறது
மருந்துகள் நிறைகிறது கலாவதியானவை
தண்ணீர் போத்தல்கள்
கண்ணீரில் நிறைகின்றன

*எஸ்.பி. பாலமுருகன், பதுளை.*

# பெண்ணே...!


வல்ல இறைவனின் செல்லப் பிள்ளையே
எனதருமைப் பெண்ணே...!
வைகறையில் எழுந்திடுவாய்
வல்லமை நிறைந்த உன் செயலால் – வெறும்
புல்லையும் கற்பகத் தருவாய் மாற்றிடுவாய்

அன்பு நிறைந்த உன் மென் மொழியால்
ஆதரவு காட்டிடுவாய் ஏழைகளுக்கு
அனுதினமும் அன்புமழை பொழிந்தே
அகிலத்தை வென்றிடுவாய் பெண்ணே!

கல்லான கணவனையும் கனிமொழியால்
நல்லோனாய் மாற்றிடுவாய் பெண்ணே!
பண்போடு வாழ்வதனின் பயனதனை
பணிவாக கூறியே திருத்திடுவாய் அவனை!

நன்மக்கள் பெற்று நீயும்
பன்மக்களையும் மதித்திடும்
மழலைகளை மகிழ்வோடு தருவாய் உலகினுக்கு
மாண்புமிகு ஒழுக்கத்தை ஊட்டியே
மாந்தர்களுள் உயர்ந்திடுவாய் பெண்ணே!

பெற்றோரை அவர் மனம் பற்றாமல்
உற்றாரோடு போற்றி வாழ் பெண்ணே!
அன்போடு அயலவரை அண்டினால்
ஆண்டவனின் அருள் பெறுவாய் பெண்ணே!



**பிரபாகரன் வேதிகா,**
கனகராயன் குளம் ம.வி.



# கண் பேசும் கவிதை

நீ கண்களுக்கு மை
தீட்டும் பென்சிலைக்
கூர்தீட்டி ஒரு கவிதை
வடித்தேன் உன் ஓரப்
பார்வை போன்றிருந்தது
அந்தக் கவிதை....!

*– டிசாந்த்*

# நூல் அறிமுகம்

## மலையகம் சமத்துவ அபிவிருத்தியை நோக்கி...




**ஆசிரியர் : எம்.வாமதேவன்**
**வெளியீடு : பாக்யா பதிப்பகம்**
**விலை : 400 ரூபா**

மலையக சமூக ஆய்வாளர் எம்.வாமதேவன்தான் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து "மலையக சமத்துவ அபிவிருத்தியை நோக்கி" என்ற பெயரில் ஒரு நூலாகக் கொண்டு வந்திருக்கின்றார். பாக்யா பதிப்பகம் அதனை நூலாக வெளியிட்டிருக்கின்றது. மொத்தம் 183 பக்கங்களில் நூல் வெளிவந்திருக்கின்றது. பேராசிரியர் தில்லைநாதன் அணிந்துரையையும், மல்லியப்புச்சந்தி திலகர் பதிப்புரையையும், நூலாசிரியர் வாமதேவன் என்னுரையையும் தந்திருக்கின்றனர்.

பேராசிரியர் தில்லைநாதன் தனது அணிந்துரையில் "மலையகத் தோட்டத் தமிழர்கள் ஏனைய சமூகங்களோடு ஒத்த உரிமை பெற்றவர்களாகவும், அவ்வுரிமைகளை அனுபவிப்பதற்கு வேண்டிய இயலுமை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்" என்பது வாமதேவனின் தாகமாக இருந்தது எனக் கூறுகின்றார்.

பதிப்பாசிரியர் மல்லியப்புசந்தி திலகர் வாமதேவன் பற்றி நல்லதொரு அறிமுகத்தை இலக்கிய நடையில் தந்திருக்கின்றார். நூலின் அரைவாசிக் கட்டுரைகள், மலையக சமூகத்தின் அபிவிருத்தி மற்றும் வாழ்வியல் அம்சங்கள் குறித்தவையாக உள்ளன. மறு அரைவாசி மலையக எழுத்தாளர்களின் ஆக்கங்கள் குறித்த கட்டுரைகளாக உள்ளன. அணிந்துரைகளும், பல மதிப்பீட்டு உரைகளும் அடங்குகின்றன.

தோட்டத் தொழிலாளர்கள் ஒரு பொருளாதாரக் கண்ணோட்டம், பத்துவீதம், தோட்டத் தொழிலாளர்களின் சமூக பொருளாதார நிலைமை, தமிழ் நாட்டில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோரின் புனர்வாழ்வு, மலையக மக்களின் முன்னுரிமைப் பிரச்சினைகள், தேசிய அபிவிருத்திக்கொள்கைஉருவாக்கமும் சிவில் சமூகத்தின் பங்களிப்பும், மலையகத்தோட்ட சமுதாயம் அபிவிருத்திப் பாதையின் தீர்மானமிக்க திருப்பு மையத்தில், மலையகத் தமிழரும் பொதுச் சேவையும், மலையக சமத்துவ அபிவிருத்தியை நோக்கி, தோட்ட சமூகத்தின் வாழ்க்கைத்தரம்மற்றும்வாழ்வாதார வாய்ப்புக்களைப் பெருப்பித்தல் என்கின்ற உபதலைப்புகளை நூலின் முதல் அரைவாசிக் கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன.

மறு அரைவாசிக் கட்டுரைகள் அமரர் இரா.சிவலிங்கம் அவர்களது வாழ்க்கையோட்டம், மலையக மக்கள் நெஞ்சங்களில் மறையாதிருக்கும் ஆசான் திருச்செந்தூரன், என்.எஸ்.எம்.இராமையாவின் "ஒரு கூடைக்கொழுந்து" மறுபிரசுரத்திற்கான அணிந்துரை, மலரன்பனின் " பிள்ளையார் சுழி" சிறுகதைக்கான தொகுதிக்கான அணிந்துரை, லெனின்மதிபானனின் "ஊற்றுக்களும் ஓட்டங்களும்" கட்டுரைத் தொகுதிக்கான அணிந்துரை, ஏ.கணபதிப்பிள்ளையின் "தேயிலைக் காவியம்" மதிப்பீட்டுரை, தமிழ்மகனின் "வனசாட்சி" தமிழகப் பார்வையில் ஒரு மலையக நாவல், மலையகப் படைப்புக்கள் சிங்களத்திலும் ஆங் கிலத்திலும் ஒரு மேலோட்டம், மு.சிவலிங்கத்தின் " வெந்து தணிந்தது காலம்" சமகால, சமூக, அரசியல் விமர்சனப் படைப்புகளின் தொகுப்பு " வாழ்வியல் ஓவியங்களாகும்" தெளிவத்தை ஜோசப் கதைகள், சடகோபனின் "கண்டிச் சீமையிலே" மலையக இலக்கியப் பரப்பில் ஒரு புதிய பரிமாணம் என்கின்ற உபதலைப்புகளில் வெளிவந்துள்ளன. 1968 தொடக்கம் 2014 வரை எழுதிய கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன.

இக்கட்டுரைகளில் "மலையக மக்களின் முன்னுரிமைப் பிரச்சினைகள்" என்பது ஒரு கவனத்தை ஈர்க்கும் கட்டுரையாக உள்ளது. அதில் வீட்டுரிமைப் பிரச்சினையையும் உயர் கல்விப் பிரச்சினையையும் முன்னுரிமைப் பிரச்சினைகளாக வாமதேவன் அடையாளம் காண்கின்றார். இரண்டும் முன்னுரிமைப் பிரச்சினைகள் என்பது ஏற்கத்தக்கவையே! மலையக மக்களுக்குச் சொந்தமாக வீடு அவசியம். அதற்கு முன்னர் அவர்களுக்குச் சொந்தமாக போதுமானளவு குடியிருப்பு நிலம் அவசியமாகவுள்ளது.

உயர் கல்வியைப் பொறுத்தவரை தொழில்நுட்பக் கல்வியில் மலையக மாணவர்கள் அதிக சிரத்தை காட்டாதது கவலைக்குரியதே. தற்போது நிலைமைகள் சற்று மாறி வருகின்றன. மலையகத்துக்கென தனியான பல்கலைக்கழகம் வேண்டும் என்பதிலும், அக்கறையுள்ளவர்கள் கவனம் செலுத்த வேண்டும். இப்பல்கலைக்கழகம் மலையக மக்களை அக ரீதியாக வலுப்படுத்துவதில் பாரிய பங்களிப்பினை செலுத்தும்.

இந்த இரண்டு பிரச்சினைகளையும் விட மலையகத் தேசிய இனத்தைத் தாங்கும் தூண்களான நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் என்பன திட்டமிட்டு சிதைக்கப்படுகின்றன. இந்தச் சிதைப்பிலிருந்து பாதுகாப்பதையும் முன்னுரிமைப் பிரச்சினையாகக் கொள்ள வேண்டும்.

மொத்தத்தில் மலையகத்தை உள்ளார்ந்த ரீதியில் தரிசிப்பதற்குச் சிறந்த நூலாக உள்ளது. மலையக மக்களில் அக்கறையுள்ளவர்கள் இந்த நூலை கட்டாயம் வாசிக்க வேண்டும்.

**சி.அ.யோதிலிங்கம்.**









வாகரையிலுள்ள இளைஞர்களுக்கு " இளைஞர் வலுவூட்டல் தந்திரோபாயம் " என்ற தலைப்பில் தலைமைத்துவப் பயிற்சி யூன் 15 ஆம் திகதி இடம்பெற்றது. 'மார்க் ரெயினிங் அன்ட் கென்சல்ரன்சி " என்ற அமைப்பின் ஒழுங்கமைப்பிலும் இது நம்தேசம், மலைமுரசு ஊடகங்களின் அனுசரணையிலும் இந்நிகழ்வு நடைபெற்றுள்ளது.




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கல்வி மேம்பாட்டுப் பிரிவு ஒரு லட்சம் ரூபாவில் முல்லைத்தீவு முன்பள்ளிச் சிறுவர்களுக்கு பாடநூல்களை வழங்கியது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சிறுமி ஒருவருக்குப் பாடநூல்களை வழங்குகின்றார்.

# 5 ஆவது கண்ணகி கலை இலக்கிய விழா











பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவி வித்தியாவிற்காகவும் அவர் போன்ற ஏனைய பெண்களுக்காகவும் கிளிநொச்சி மாவட்ட கிறிஸ்தவத் திருச்சபைகள் இணைந்து விசேட வழிபாடு நடத்தின.

ஐந்தாவது கண்ணகி கலை இலக்கிய விழா 13.06.2015 (சனிக்கிழமை) மட்டக்களப்பு வந்தாறுமூலையில் கோலாகலமாக ஆரம்பமானது. இதனை முன்னிட்டு மாபெரும் பண்பாட்டுப் பவனி இடம்பெற்றது.



## வாசகர்களே..

**வாசகர்களே...! உங்கள் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், விமர்சனங்கள் போன்றவற்றை எங்களுக்கு அனுப்புங்கள்**
**அனுப்பவேண்டிய முகவரி: இல. 43, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

இவ்விதழ் இல. 43, 03ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஜெயஸ்ரீ பிறிண்டேஸ் (இல.83, கல்லூரி வீதி, நீராவியடி) இல் 17.06.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.